ஞாயிறு வெளியீடு. விலை 0–1–3. REGD. No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 3. 4–2–45 இதழ் 46.

## ஆரியம் காண்!

—:(o):—

[நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா]

தமிழகத்தில் பிறந்திடலால், தமிழ்மொழியை மொழிந்திடலால்
தமிழனென நடித்திடலால், தமிழுணவை யருந்திடலால்
தமிழரிலும் பிரியாது, தான்கலந்து வாழ்ந்திடலால்
தகுதியற்ற ஆரியனைத் தமிழனெனக் கோள்கவெனும்
தகையுணராத்தோழ! இவை தயங்காது கேட்டிடுவாய்.
நெல்வயலில் பிறந்திடலால், நெல்லுடனே வளர்ந்திடலால்
நெல்லினின்றும் பிரிப்பரிய, நேரியதாய்த் தோன்றிடலால்
நெற்களையாய் மதித்தொழிக்கும் நெல் மிலட்டிநெல்லாமோ?
கோழியடை காத்திடத்தன் குஞ்சுடனே வெளிப்பட்டுக்
கூட்டிலுடன் பலநாட்கள் குணமறைந்து வாழ்ந்திடினும்
வகைபிறிதாம் வாத்ததுவும் கோழியெனல் குணமாமோ?
நல்லதொரு மாமரத்தில் புல்லுருவி முளைத்துடனே
வல்லதொரு மரம்போல வளம்படைத்து வளர்ந்திடினும்
நல்லதொரு மாங்கனிபோல் புல்லுருவி நல்கிடுமோ?
அதனால்,
பால்மானி தன்றுணையால் பாலின் நீர்காண்பாய்
பகுத்தறிவுக் கண்கொண்டு பைந்தமிழில் ஆரியம்காண்,
வருத்திடுதல் வேண்டா பிற.

**கா. மா. நன்னன்**
அண்ணாமலைநகர்

கற்பனைச் சித்திரம்:

# பிரசங்க பூஷணம்!

பரதன்

பிரசங்க பூஷணம், புலவர் பூலோக நாதர், அன்று பட்டம் சூட்டிக்கொள்ளப்போகும் பார்த்திபன்போலக்காணப் பட்டார். காரணம் உண்டு அவருடைய களிப்புக்கு, அன்றுமாலை ஆலமரத்தடியார்கோயில் ஆறுகால் மண்டபத்திலே, அவருடைய சொற்பொழிவு ஏற்பாடாகி இருந்தது!

“குறும்புக்காரச்சிறுவர்கள் இன்று மாலை மட்டும், என்னைக்கண்டால், என்மொழி கேட்டால், மறுதினம் முதற்கொண்டு, மறந்தும், சேட்டை செய்யார். ஊர்ப் பிரமுகர்கள் பலருமன்றோ கூடி இருப்பர். என் புகழை எடுத்துரைப்பர். மாலை அணிவிப்பர், கைகொட்டி மகிழ்விப்பர், மகிழ்வர். இவைகளைக்கண்டபிறகுகாளைகளின் கண்கள் திறக்கும்” என்று புலவர் எண்ணிக்களிப்படைந்தார். அவருடைய சந்தனப்பொட்டு முதற்கொண்டு, சங்கராபரணம் வரையிலே சகலமும், பள்ளிக் கூடச்சிறுவர்களுக்கு, நகைச்சுவைதருவனவாக இருக்கும். தொல்லை அதிகம். எனவே பிரசங்கபூஷணம், அரியதோர்சொற்பொழிவு செய்து, அதன்மூலம், புகழ் ஈட்டி, ஈட்டிய புகழை மாணவர் முன் நீட்டி, அவர் தம் சேட்டையினை ஓட்டிவிட இஃதோர் வாய்ப்பு என்று எண்ணினார், எனவே, இறும்பூதெய்தினார்.

ஆலமரத்தடியார் கோயில் அர்ச்சகர் அருணாசல ஐயருக்கும் அன்று ஆனந்தந்தான். வௌவால் வாழ்ந்துவந்த அக்கோயிலின்மூலம் அவருக்கு வருமானம் எங்கிருந்து கிடைக்கும்! கோயில் வாசலிலே உட்கார்ந்து கொட்டாவி விட்டுக்கிடந்தார். பலவிதமான யோசனைகளுக்குப் பிறகு, அவர்ஊர்மக்களுக்கு ஆலமரத்தடியார்கோயிலிடம்பக்திசிரத்தை உண்டாகச்செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் கோயிலுக்குப்பலரும்வருவார்கள், வருமானம் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்தார். அவர், இந்தக்கோயில் பாத்யதையை ஒரு துரும்பாக மதித்தகாலம் ஒன்றுண்டு. அப்போது அவருக்குப்பட்டிணத்திலே உத்யோகம். கிரகம் செய்த கோளாறினால் அதை இழக்கநேரிட்டது. அதன்பிறகே அவருக்கு ஆலமரத்தடியாருக்குச் சேவை செய்யவேண்டுமென்ற அக்கரை தோன்றிற்று. “பார்த்திங்களா, சாமி! என்னமோ பட்டணம் பட்டணமுன்னு போனிங்களே, பாருங்க, ஆலமரத்தடியார் அழைச்சிட்டு வந்தாரு, விடுங்களா அந்தப்புண்யம்” என்று கூறுவர் கிராமமக்கள். “இதிலேமட்டும் குறைவில்லை! கோயில் பக்கமோ வருவதில்லை. என்னசெய்வதாம் இந்தக்கோயிலைக் கட்டிக்கொண்டு, ஈஓட்டிக்கொண்டிருக்கிறேன்’ என்று அருணாசலஐயர், விசனத்துடன் கூறுவார். கடைசியிலேதான்யுக்திதோன்றிற்று, மக்கள் மனதிலே பக்தி புகுத்தும் வழிகண்டு பிடித்தார். ஆலமரத்தடியார் கோயில் மகத்துவத்தை மக்களுக்குஎடுத்துக்கூறவும், பொதுவாகவே பக்தி மார்க்கத்தின் பெருமையை மக்களிடம் பேசவும், ஓர் சொற்பொழிவு ஏற்படுத்த எண்ணினார். சத்கதா காலட்சேபத்துக்குக் கொஞ்சம் பொருட் செலவு பிடிக்கும், எனவே, பிரசங்க பூஷணப் புலவர் பூலோகநாதரை, அன்புடன் அழைத்தார், அரியதோர் சொற்பொழிவுநடத்தும்படி. அவருக்குத்தான் இத்தகைய வாய்ப்புக் கிடைக்குமா என்றதாகமாயிற்றே, ஐயர் வேண்டிக்கொண்டதும், ஆசிரியர் மனமுவந்து இசைந்தார். இசையுமுன் கூறினார், “நானென்ன அவ்வளவு அதிகம் அறிந்தவனா? கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு. கனியிருக்கக் காய் தேடுதல்போல், எல்வளவோ அறிவாளிகள் இருக்க, என்னை அழைத்தீர், சிறுமதி உடையேன் ஆயினும், சிறுமதியுடையோன் அருளைத் துணைகொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே எனும் ஆன்றோர் மொழிப்படி, தொண்டுசெய்யச் சித்தமாக இருக்கிறேன்” என்று புலவர் கூறினார், கூறிவிட்டு மிக மகிழ்ச்சி அடைந்தார். ஏன் இருக்காது! ஆறுவாசகங்கள் அவர் பேசினார். அதிலே மூன்றுமேற்கோள்கள்.

1. கற்றது கைம்மண்ணளவு
   கல்லாதது உலகளவு.
2. கனியிருக்கக்காய் தேடுதல்.
3. என்கடன் பணிசெய்துகிடப்பதே.

ஆகமூன்று, ஆறுவாசகங்களிலே. பிரசங்கபூஷணமல்லவா? வெட்டிப்பேச்சா பேசுவார், மேலும் நெட்டுருப்போட்ட, அடிகளைக்கொட்டிப்பேசாவிட்டால் ஏட்டைப் பிடித்ததனால் யாது பயன்! எனவேதான் ஆறிலே மூன்று, ஆன்றோர் மொழியைப் பொழிந்தார். அம்மட்டோ! சிறுமதியுடையோன்சிறுமதி உடையோன் அருளைத் துணைகொண்டு என்று கூறினார். அருணாசல ஐயரே! என்ன எண்ணுகிறீர் என்புலமைபற்றி! அந்த வாசகத்திலே பொதிந்துள்ள அழகு கண்டீரா! சிற்றறிவு படைத்தநான், என்ற பொருள்பட, சிறுமதி உடையேன் என்று கூறினேன். பிறைச்சந்திரனை அணிந்த பெம்மானின் அருளைத் துணைக்கொள்வேன் என்ற கருத்துக்குச் சிறுமதியுடையோன் என்று சிவனாரைச் சொன்னேன்! ஓரேபதம், இருபொருள்! அதுஓர் அழகு! சிறுமதி உடையோன் என்பது நிந்தாஸ் துதிஎன்ற இலக்கணச் செறிவு கொண்டது. இத்தனையும் ஒரே வாசகத்திலே அமைத்தேன், எப்படிஎன் சமர்த்து” என்று புலவர் கூறுவது போலிருந்தது, அவருடைய கெம்பீரமான கனைப்பும், பார்வையும். அருணாசலஐயர், அதிகம் பேசவில்லை. தலைவரைத் தயார் செய்வதற்காக அவர் சென்றுவிட்டார். புலவர் தனது சீடனொருவனை அழைத்தார், ‘ஏடுதனில் எனது மொழியைப் பொறித்திடு, மாலைச்சொற்பொழிவுக்கு” என்றார். சீடன், பிரசங்கபூஷணமாக வேண்டியவன்! எனவே, ஏடும்கையுமாகப் புலவர் எதிரே அமர்ந்தான். ஈசனைத் தியானித்துவிட்டுப், புலவர் துவக்கினார், சொற்பொழிவை.

“அன்பரே!” என்றார், ஏடெழுதி, அன்பரே! என்று எதிரொலித்தார் எழுதி முடித்து. புலவர், தலையை அசைத்தார், கனைத்தார், “வேண்டாம், அன்பரே! என்று அழைப்பதைவிட, மெய்யன்பரே! என்று இருக்கலாம் என்று எண்ணுகிறன்” என்று ஓர் திருத்தம் உரைத்தார். அன்பரே அடிபட்டது, மெய்யன்பரே! பொறிக்கப்பட்டது ஏட்டிலே.

“அப்பா! மெய்யன்பரே என்றுகூறுவதைவிட, சைவமெய்யன்பரே! என்று கூறிடல் சாலச்சிறந்ததென்று எண்ணுகிறேன்” என்றார் புலவர். அவருடைய எண்ணத்தைத்தானே அவன் ஏட்டிலே எழுதவேண்டியவன். எனவே, மெய்யன்பரே! என்ற பதத்தையும் அடித்துவிட்டு, சைவமெய்யன்பரே! என்று எழுதினான்.

“என்ன எழுதினாய் தம்பி!” என்று கேட்டார் புலவர்.

“சைவமெய்யன்பரே என்று எழுதினேன்” என்றான் சீடன். புலவர் ஓர்புன்னகை புரிந்தார். “அது நியாயமல்ல!” என்று கூறினார். “எது?” என்றுகேட்டான் ஏடுதாங்கி. “ஆலமரத்தடியார், சிவனார்; அடியேனும் சைவனே! என்றாலும், இன்று அங்கு கூடப்போகும் அன்பர்களிலே, சைவர்மட்டுமா இருப்பர். எங்கேனும் உண்டா? வைணவரும இருப்பர். எனவே, சைவமெய்யன்பரே! என்று கூறுவதோடு அமைதல் ஆகாது, நியாயமுமாகாது, ஆகவே சைவ, வைணவ, பௌத்த, கிருஸ்தவ, இஸ்லாமிய, அன்பர்களே என்றுதான் சபையை அழைத்தல் பொருத்தம். ஆம்! அதுபோல் எழுது என்றார். எழுதினான். புலவருக்கு அப்போதுதான் திருப்திஉண்டாயிற்று “தம்பி! பலருக்குத் தெரிவதில்லை இந்தப்பக்குவம். ஒருபெரிய கூட்டத்திலே, பலமதத்தினர் வந்திருக்கக்கூடுமே, நாம் அனைவரையும் அழைத்தன்றோ பேசல்வேண்டும் என்ற சாதாரணவிஷயம்கூடப் புரிவதில்லை, அப்படிப்பட்டவர்களின் அணைப்பிலே இருந்

(11-ம் பக்கம் பார்க்க)

## பிரசங்க பூஷணம்!

(11ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தை அவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை. சிவ! சிவ! அபசாரம்! அபசாரம்! இம்மை மறுமை இரண்டினுக்கும் இழுக்குத்தேடுகிறார்கள் வழுக்கிவிழுந்த சழுக்கர்" என மளமளவென்று பொழிந்தார், சீடர்கை வலிக்கவலிக்க அதனை எழுதினார். அந்தப் பகுதிமுடிந்ததும், பிரசங்க பூஷணம், வியர்வையைத்துடைத்துக் கொண்டு, "தம்பி! எப்போதும் ஒன்று கவனமாகக் கேள், பிராமணர்களைப்புகழ்ந்தேபேசிவிட வேண்டும். என்தெரியுமா? நாம் தமிழர், ஆகவே நாம் என்னசெய்தாலும் எதைப் பேசினாலும், எப்படி நடந்துகொண்டாலும், நமது தமிழ்மக்கள்நம்மைக்கெடுக்க மாட்டார்கள். பிராமணர்களோ, நமது இனமல்ல. ஆரியம்நுழைந்து, நம்மவரை அடுத்துக்கெடுத்திருக்கிறது. இன்னும் அதன்போக்கைத் தடுத்தால், நமக்குத் தொல்லைவிளையும். ஆகையினால், நமது சொற்பொழிவுகளிலே, பிராமணர்களைப் புகழ்ந்துபேசியும், பாராட்டியும் ஆதரித்தும்வைத்தால், நமக்கு அவர்களால் தொல்லைவராது. தமிழர் கோபிப்பர், என்ன இந்தப்புலவன் இப்படிப்பிராமணர்களை ஆதரிக்கிறானே, இனப்பற்றே இல்லாமல் என்று கேட்பர். கேட்டால் என்ன! என்ன நண்பரே! நான், எந்தப் பிராமணனை ஆதரித்தேன். இன்றையப் படுபாவிகளையா? செச்சே! நான் என்ன மரக்கட்டையா, மண் பொம்மையா, எனக்கு ரோஷம்வராதிருக்க. நான் பாராட்டினது அந்தணர்களை! அன்புநெறி, அருள்நெறிபூண்டவர்களை ஆதரித்தேன், அது பார்ப்பனகுலத்துக்குள்ள பண்பா! என்றுகூறினால், நமது தமிழ்த் தோழர்கள், நமதுமுதுகைத் தட்டிக் கொடுப்பர். ஆகநமக்கு ஆரியர், திராவிடர்ஆகிய இருவரிடத்திலும் சீரும்செல்வாக்கும்கிடைக்கும்." என்றுகூறினார். சீடன் இந்தச்சீலத்தைக் கடைப்பிடிப்பதாகக்கூறினான். பிரசங்கத்தைக்கூறலானார், கூறுமுன், மறுபடி ஒருமுறை சீடராகவேபடித்துக்காட்டினார், தொடர்பு தெரிவிக்க. புலவர் புதுமுறுக்குடன்கூறத் தொடங்கினார், உடனே திகைத்தார், "தம்பி! ஒரு பச்சைநிறத்தாளைக் கண்டாயோ?" என்றுகேட்டார். "இல்லையே! என்ன தாள்?" என்றார்சீடர். "இன்றைய சொற்பொழிவு அழைப்பிதழ்" என்றார் பிரசங்கபூஷணம். உள்ளே ஓடினார், புத்தகங்களைப்புரட்டினார், துண்டுச்சீட்டுக்காணப்படவில்லை, தயருற்றார். மனைவியைக்கேட்டார், "அந்தக்குப்பையிலே அது எங்கேஇருக்கிறதோ யார் கண்டது" என்று துடுக்காகக்கூறினர் அம்மையார். "உன்கண்களுக்கு அது குப்பைதான்! பேதாய்! அதுகுப்பை! அந்தக்குப்பையிலேகிடக்கும் மாணிக்கமும் மரகதமும், உனக்கென்னடிதெரியும்" என்று கண்டனக்குரலிலேபேசினார் புலவர். அம்மையார், சக்திஸ்வரூபமல்லவா! அவ்வளவு இலேசிலேவிடவில்லை.

"கோழி குப்பையைக்கிளறியாவது, புழுபூச்சியைக்காண்கிறது, நீஇந்தக் குப்பையைக் கிளறிக்கிளறிக் கண்டது என்ன?" என்றுகேட்டார்.

"பேதாய்! பெண்பேதாய்! பொன்னாசைகொண்ட பெண்பேதாய்! பொன்னும் பொருளும் எதற்கு? காதற்றஊசியும் வாராதுகாண் இக்கடைவழிக்கே" என்றார் புலவர், அந்தநேரத்திலே, அவர் காணாமற்போனசீட்டு இருக்கிறதாஎன்று, பட்டினத்தார் புத்தகத்தைப்புரட்டிக் கொண்டிருந்தார்.

"காதற்றஊசியும் வாத்தான்காணோம், நீ கத்திக்கத்திவந்தும்" என்று கடிந்துரைத்தார் சக்தி. பூலோகநாதர் பதில் பேசவில்லை. என்ன பேசுவதுஎன்றே தெரியவில்லை. ஆனால் மனதிலேமட்டும் "கூறுமற்சன்யாசம்கொள்" என்ற வாசகம்குடிஏறிக்குடையலாயிற்று. "குப்பையாம்! கம்பன்சேர்த்த இம்மணிகள் குப்பையாம்" என்று தனக்குள்கூறிக்கொண்டே. பிரசங்கபூஷணம், புத்தகங்களின்மீதுபடிந்திருந்த தூசைத்தட்டிக் கொண்டிருந்தார்.

"தங்களைக்காண ஐயர்வந்திருக்கிறார்" என்றுசீடன்தெரிவித்தான். ஓடோடிச் சென்றார், அருணாசலஐயர் கூடத்திலே இருக்கக்கண்டு, "மாலை ஆறுமணிக்குத் தானே, இதற்குள்ளாகவா? நான்இன்னும் குறிப்புத்தயாரித்து முடிக்கவில்லையே" என்றுகூறினார். "அவசரம்வேண்டாம். நிதானமாகவேதயாரிக்கலாம்" என்றார் ஐயர். அப்போதுதான், பிரசங்கபூஷணத்துக்கு நிம்மதியாயிற்று. பிரசங்கத்திலே இன்னும்குறள், நாலடியார், நன்னெறி, தேவார திருவாசகம் பட்டினத்தார்பாடல், தாயுமானார்பாடல்ஆகியவைகளை எங்கெங்கேபுகுத்துவது என்றே தீர்மானிக்கவில்லை. பிரசங்கத்துக்குரியவிஷயம் என்னஎன்பது மறந்துவிட்டது. எந்தவிஷயம்பற்றிப்பேசவேண்டுமெனக்குறிக்கப்பட்டிருந்தது, என்பதை அறியத்தான் அந்தப் பச்சைத்துண்டுக் கடிதத்தைத்தேடினார். அந்தப் பாழாய்ப் போனகடிதம்காணவில்லை. இந்தநேரத்திலே, ஐயர்வந்தால், பிரசங்கபூஷணம் பயப்படாமலிருப்பாரா! நல்லவேளை, அவசரம்இல்லை என்று கூறிவிட்டார், ஆகவே, அருமையாகத்தயாரித்துவிடலாம் பிரசங்கத்தைஎன்று மகிழ்ந்தார், "தலைவர் தயாராகத்தானே இருக்கிறார்?" என்றுகேட்டார் ஐயரை. "நல்லகேள்வி கேட்டீர்கள். அவர் துடிக்கிறார்." என்றார் ஐயர். "அடடா! நமது ஜெமீன்தாரர், நிரம்பத்தமிழ்அறிவு, அன்புபடைத்தவர். கவிதாஉள்ளம்அவருக்கு" என்று அன்றுதலைமைவகிக்கஇருந்த ஆலூர் ஜெமீன்தாரரைப் பாராட்டிப்பேசினார், பிரசங்கபூஷணம். பேசியபோதே, அவர் முகத்திலேகொஞ்சம் பயம்தட்டிற்று.

"அடடா! என்னகாரியம்செய்துவிட்டோம். முட்டாள்தனமானகாரியமல்லவாசெய்தோம். பிரசங்கத்தை ஆரம்பிக்கும்போதே ஜெமீன்தாரரின் சீர்சிறப்புப் பற்றியும், குலப்பெருமை குடும்பகௌரவம்பற்றியும், கொடைநடைபற்றியும் பாராட்டியன்றோபேசவேண்டும். அவருக்கும், தமிழை அந்தக்காலத்திலே வளர்த்த மூவேந்தர்களுக்கும் உவமை காட்டி, அவருடைய உள்ளத்தைஉருக்க வேண்டாமா? அதைஎழுதாமல், வேறு எதைஎதையோவன்றோ இதுவரை எழுதியிருந்தோம். இந்தப் பிரசங்கம் கூடாது. இதைமாற்றி எழுதியேஆக வேண்டும். ஒருவிருத்தம், ஜெமீன்தாரரின் குணாதிசயத்தைப் புகழ்ந்துபாட வேண்டும். சரி! சரி! நிரம்பவேலைஇருக்கிறது, ஆனால் ஐயர்தான் அவசரம்வேண்டாம்என்றுகூறிவிட்டாரே. தயார்செய்துவிடலாம், என்று எண்ணினார்.

"நம்மஜெமீன்தாரர், இந்தவிழாவை ரொம்பவிமரிசையாக நடத்திவிட வேண்டுமென்று முனைந்திருக்கிறார். நான் சொற்பொழிவுடன் நிறுத்தலாம் என்றேன். அவர், "அதுகூடாது. புலவரின் சொற்பொழிவுடன், பாட்டுக்கச்சேரியும் நடனக்கச்சேரியும் நடத்திவிடவேண்டும் என்றுகூறினார். பிரசங்கபூஷணத்துக்கு பெரிய ரோஜாமாலைபோட்டாகவேண்டும் என்று பிடிவாதம்செய்கிறார். மல்லிகைமாலைதான் தயார்செய்தேன்என்று சொன்னேன். அவருக்கு மகாகோபம் வந்துவிட்டது. அவருடைய புலமை என்ன, அறிவுஎன்ன, ஆராய்ச்சிஎன்ன, அவருக்குக் கேவலம் மல்லிகைமாலையா போடுவது. அதை உங்கள் கோயில்மாட்டின்கழுத்திலேபோடு என்று கோபித்துக்கூறினார். ரோஜாமாலையேவாங்கிவிடுவோம் என்றுகூறினேன்.

சதிர்க்கச்சேரிக்குச் சிந்தாமணிசகோதரிகளையும், பாட்டுக்கச்சேரிக்குப் பழனியப்பனையும் ஏற்பாடுசெய்துவிட்டாராம். செலவு அவருடையது: ஜனத்துக்கு நல்லகண்ணுபார்ட்டி, ஏற்பாடாகிவிட்டது. நான் ஏதோ சாமான்யமாக ஒரு சொற்பொழிவு நடத்தநினைத்தேன், அது பெரிய திருவிழாவாக மாறிவிட்டது. இன்னும் ஒரு விசேஷம் என்ன தெரியுமா, சதிர் நடத்தப்போகும் சிந்தாமணி நமது ஆலமரத்தடியார் கோயில் தாசியாகப்போகிறாள், அந்த முத்திரை வைபவமும் நடைபெறப்போகிறது. உம்மிடம் உண்மையைச் சொல்கிறேன், இவ்வளவு "ஜோராக" ஏற்பாடுகளை ஜெமீன்தார் மாற்றிச் செய்வதற்குக்காரணமே, சிந்தாமணிக்கு அவருடன் இருக்கும் சிநேகிதந்தான். உம்மபிரசங்க விஷயத்தைக்

(4-ம் பக்கம் பார்க்க.)

## பிரசங்க பூஷணம்!

3-ம் பக்கத் தொடர்ச்சி.

கூட ஜெமீன்தார் மாற்றிக்கொள்ளச் சொல்லிவிட்டார். "நாட்டியக்கலையும் நாட்டு முன்னேற்றமும்" என்பதுபற்றிப் பேசவேண்டும் என்று அருணாசலஐயர், ஆனந்தமாகக் கூறினர். புலவருக்குவிழா விமரிசையாக மாறுவது கேட்கமகிழ்ச்சியாகத்தான் இருந்தது, என்றாலும், நாட்டியக்கலைபற்றி என்ன பேசுவது என்ற திகைப்பு உண்டாயிற்று. உடனே அது போய்விட்டது, சே! இதுஎன்ன பிரமாதம்! சிலப்பதிகாரம் இருக்கவே இருக்கிறதுஎன்று தைரியமடைந்து.

"சரி ஜெமீன்தார் இவ்வளவு அக்கறை எடுத்தது நமது அதிர்ஷ்டம். அவர் இஷ்டப்படியே நான் நாட்டியக் கலைபற்றிப் பேசுகிறேன். அதில் என்னதடை இருக்கிறது? அருங்கலைகளுள் அது ஒன்று, ஐயன் தில்லையில் அதனை விளக்குகிறான். அம்மைக்கும் அது ஆனந்தமே! பிரபஞ்சமே அரங்கம்! நாமெல்லாம் நாட்டியப் பதுமைகள்! அவன் ஆட்டுவிக்கிறான்" என்றார் புலவர்.

பேஷ்! பேஷ்! சிந்தாமணி சொக்கிவிடுவாள் இந்தப் பிரசங்கத்தைக்கேட்டு" என்றார் ஐயர். "தமிழ் இனிமை எனும் பொருளுடைத்து" என்றார் புலவர்பெருமையுடன்.

"சிந்தாமணி நம்மகோயில் தாசியாகிவிட்டால், பிறகு, கோயிலுக்குக் கூட்டம் ஏராளமாகவரும். வாரந்தோறும் ஓர்பிரசங்கம் செய்யலாம் நீர்" என்று களிப்புடன்கூறினர் ஐயர். புலவருக்குக் கொஞ்சம்கசப்பாக இருந்தது அந்தப்பேச்சு, இருந்தாலும் சகித்துக்கொண்டார்.

"சரி! நான் ஆறுமணிக்கு ஆலயம் வந்துவிடுகிறேன்" என்று, கூறினர் புலவர், சீக்கிரமாக இவன் தொலைந்தால் தானே சிலப்பதிகாரத்தைத்தேடி எடுக்கலாம் என்றசிந்தனையுடன். ஜெமீன்தார், ஏற்பாடுகளிலே செய்தமாறுதலைச்சொன்னேனே தவிர, முக்யமான மாறுதலைச் சொல்லமறந்து விட்டேனே. பிரசங்க தேதியை மாற்றிவிட்டார். அடுத்த வெள்ளிக்கிழமைதான், இந்தவைபவம்" என்று ஐயர் கூறினர். பிரசங்கபூஷணர், பேசவும் முடியாதசோகமுற்றார். காலைமுதல் எவ்வளவு கஷ்டம்! சிந்தனை! தயாரிப்பு! கடைசியில் பிரசங்கம் இன்று இல்லை என்று எவ்வளவு சுலபத்தில்சொல்லிவிட்டார்கள்—என்று சோகமுற்றார். ஐயர் விடைபெற்றுக்கொண்டுபோனர்.புலவர், ஏடுஎழுதுபவனை வீடுவரச்சொல்லிவிட்டு அதுவரையிலே தயாரித்த அரிய சொற்பொழிவைப்படித்துப் படித்துரசித்தார். வேறென்ன செய்வார், பாபம்! சீடன் ஓடோடிவந்தான் அதேநேரத்தில். "மறந்தேபோனேன்! நீங்களும்மறந்துபோனீர்களே! அடுத்த வெள்ளிக்கிழமை, புன்னைவனநாதர்கோயிலிலே ஓர்பிரசங்கம்செய்வதாக ஏற்பாடாகிஇருக்கிறதே. இரண்டும் அதேகிழமையிலே எப்படி நடத்துவது" என்றுகேட்டான்.

"என்ன தம்பி! இதுவாபிரமாதம்.ஒரே நாளிலே இரண்டு சொற்பொழிவுகள் நடத்தவா முடியாது. பிரசங்கபூஷணம் என்றபெயர்என்ன அர்த்தமற்றதா! பைத்யக்காரப்பிள்ளை! புன்னைவனநாதர்கோயில் இங்கிருந்து மூன்றுகல்தொலைவு. மாலை மூன்றுக்கு அங்கே பேசுவது. இங்கே 6-மணிக்குமேல்தானே ஆரம்பம். ஒருபேச்சுச்சொல்லி அனுப்பினால் ஜெமீன்தாரர்தமது பெட்டிவண்டியை அனுப்பி வைக்கிறார்" என்று புலவர் கூறினர்.

"சரிதான்! எதற்கும் தங்களுக்குக்கவனப்படுத்தலாம் என்றுவந்தேன்" என்று கூறினன் சீடன்.

"கவனப்படுத்தினது நல்லதுதான். நான்மறந்துதான் போய்விட்டேன். ஆமாம், நினைவில்லை, புன்னைவனநாதர் கோயிலிலே எதைப்பற்றிநான்பிரசங்கம் செய்ய ஏற்பாடாகிஇருக்கிறது" என்று புலவர்கேட்டார்.

கொஞ்சம் பயத்துடன் சீடன், "நாட்டியக்கலையின் கேடுகள்" என்றான். பிரசங்கபூஷணத்தின்காதிலே அந்தப்பேச்சுப்புகுந்ததும், அவருக்குப் பிரபஞ்சமே நாட்டியமாடுவதுபோலிருந்தது! என்ன செய்வார்!!

"சரி! போடா!" என்று, சீடன் மீது காட்டினர், கோபத்தை! வேறு எங்கே காட்டுவது?

"நீபிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜாதேசிங்கு
உன்குதிரை பிறந்தது வெள்ளிக்
கிழமை ராஜாதேசிங்கு
சண்டைபிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜாதேசிங்கு"

என்றபாடல் வேறு அவர் மனதிலே புகுந்து குடைந்தது!!

## பாகிஸ்தானத்திற்கு ஆதரவு

லக்னோபல்கலைக்கழக அவைக்கூட்டத்தில் ஐக்கிய மாகாண முஸ்லீம் லீக்கின பிரபல அங்கத்தினரும், அஷ் மாகாணச் சட்டசபைத்துணைத்தலைவருமான தோழர் பீகம் ஐஜாஸ்ரசூல் அவர்கள் "நாம் பிணைக்கப்பட்ட அடிமை இந்தியாவை ஏற்றுக்கொள்வதா அல்லதுபிரிக்கப்பட்ட உரிமை இந்தியாவை ஏற்பதா" என்று கேட்டு,இந்துக்கள்முன்னதையேவேண்டுமென்றால் அவர்கள் மூடநம்பிக்கையை பகுத்தறிவுபெறவேண்டும் என்றும், பின்னத ஆதரிப்பார்களானால்தாமதமின்றி முஸ்லீம்கள் கோரும் பாகிஸ்தான் திட்டத்தை அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் இந்நாட்டின் விடுதலைப்போராட்டத்தில் முசல்மான்களுடன் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன்உழைக்கவேண்டும் என்றும் விளக்கமுறப்பேசினர்.

## வேண்டுகோள்.

### கவிஞருக்குப் பணமுடிப்பு

தோழர்களே!

தற்பொழுது நாட்டில், இருக்கின்ற கவிஞர்களுக்கும், மறைந்த கவிஞரின் ஞாபகச்சின்னத்திற்கும்அவர்கள்பால்பற்றுக்கொண்ட மக்கள் பணமுடிப்புஅளித்துவருவது அனைவரும் அறிந்ததே, ஆதலால் நமது புரட்சிக்கவி, பாரதிதாசன் அவர்களுக்கும் நாஞ்சி நாட்டு அபிமானிகளாகிய நாங்கள் அவரின் பிறந்தினமாகிய எப்ரல் 17-ம் நாளன்று பணமுடிப்புக் கொடுக்கக் கருதி, அதற்கான பணவசூல் செய்து வருகின்றோம். ஆதலால் கவிஞர்பால் பற்றுக்கொண்ட நாஞ்சி மக்கள் அனைவரும் தங்களாலியன்ற அளவுபொருள் தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

இதுபோன்றே ஒவ்வொருஊர்த்தோழர்களும் ஆங்காங்கே வசூல் செய்து கவிஞருக்குக் கொடுக்கப்பெரிதும்விழைகின்றோம்.

இப்படிக்கு,
**கவி பாரதிதாசன் நிதி வசூல்**
கமிட்டி கோட்டாறு.

---

இராமநாதபுரமாவட்டத் தோழர்களே,

நமது மாவட்டமுதலாவது திராவிடர் கழக மாநாடு காரைக்குடியில் பிப்ரவரி மாத இறுதியில் நடத்துவதற்கு, வரவேற்புக்குழு அமைக்கப்பட்டதில், இன்னும் நமது மாவட்டத்திலுள்ள ஆர்வமிக்கபல தோழர்களையும் சேர்த்துக்கொள்வதென்றதீர்மானப்படி சேரவிரும்பும் தோழர்கள் அனைவரும் தங்கள் பெயர்களைப், பிப்ரவரிமாதம் 10-தேதிக்குள் வரவேற்புக்கமிட்டிக்காரியாலயம்திராவிடர் [illegible] காரைக்குடி, என்ற முகவரிக்கு [illegible] விக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ராம. சுப்பையா,
நா. இராமசாமி,
விளம்பர அதிகாரிகள்.

---

சென்னையில்

## பொதுக்கூட்டம்.

**5-2-45** திங்கள் மாலை **6-15** மணிக்கு

கோகலே மண்டபத்தில்

ரிடயர்ட் ஜில்லா செஷன்ஸ் நீதிபதி தோழர். W. சக்ரபாணி நாயுடு அவர்கள் தலைமையில் "இந்து சட்டத்திருத்தம்" என்பதுபற்றித் தோழர்கள் S. முத்தையா முதலியார், B. A; B. L; பெரியார் ஈ. வெ. ரா; S. இராம [illegible], M. A; B. L; S. லட்சுமிரதன் [illegible], M. A; B. L; C. N. அண்ணாதுரை M. A; A. T. S. சாமி B. A; B. L; திருமதிகள். இந்திராணி பாலசுப்ரமணியம், குஞ்சிதம் குருசாமி, B. A; L. T; டாக்டர் தருமாம்பாள், மூத்தியா [illegible] முத்து ஆகியவர்கள்சொற்பொழிவாற்றுவர்.

## தோடுடைய செவியனை

10ம் பக்கத் தொடர்ச்சி.

கேட்பதென்று கலங்குகிறீர்கள்! வேண்டாம் அந்தக்கலக்கம். அதோ சென்னையில் இருக்கிறது சாதுஅச்சுக்கூடம்! அங்கிருக்கிறார், அறுபதாண்டையும் அவனருளால் கழித்த அன்பர்-சிவஅன்பர்-மெய்யன்பர்-சமரசசன்மார்க்கங்கண்ட சாது-பெரியபுராணத்துக்கு அரும்பத விசேட ஆராய்ச்சிக்குறிப்புரையும் உரைநடையும் எழுதிய விற்பன்னர்-சம்பந்தர் சேக்கிழார் போன்றாரின் அடிச்சுவட்டை அகலாதுநிற்கும் அன்பர்-எம் நண்பர் திரு: வி. க. அவரிடம் சென்றுகேளுங்கள் கூறுவார், இதற்குப்பொருள். ஒருக்கால், "ஆண்டவனுடைய அருளமுதம் உண்டு ஆளுடைய பிள்ளையாரான அந்தணச்செல்வன்-ஆலவாயப்பன் அருள் பெற்று அமணர்களைக்கொன்றொழித்தகோமான்—என்பைப் பெண்ணாக்கிய பெம்மான்-ஆண்பனையைப்பெண்பனையாக்கிய அண்ணல்-மறைக்காட்டுக் கதவைக்கவியால் அடைத்த காவலன்-கழுமலக்கண்ணியன் சிரபுரத்துச்சீமான்-சீர்காழிச் செம்மல்—தோணிபுரத்தோன்றல் - வேணுபுர வேந்தன்-பூந்தராய்ப்பூமான்-சண்பைச் சம்பந்தன்—என்குரு-என் ஆசிரியன்-எனக்குவழிகாட்டி-இவர், திருவாய்மலர்ந்தருளிய திருமறையாம் தேவாரத்தில்குற்றம்காண முயலும் நீவிரா 'தோடுடைய செவியன்' என்று, தோன்றுமறையாத் தொன்மையோன்பேரில் பாடப்பட்ட பாடலுக்குப் பொருள்கேட்பது? என்னே, என்னே, என்னே இவர்தம் அறிவிருந்தவாறு! பெரியபுராணத்துக்குப் பேருரைஎழுதியதோடு நின்றுவிடமாட்டேன். தேவாரத்திற்கும் திருந்தியஉரைஒன்றுகாண்பேன்-காண்கின்றேன்-கண்டுவிட்டேன்" என்று கசிந்து கண்ணீர்மல்கிக் கலங்கிக்கரைந்து விடுவாரானால் என்செய்வதென்ற கவலை உங்கட்கு வேண்டாம். நான் அவருடைய நண்பன் என்ற முறையில், அவர் அதற்குக்கூறும் பொருளை அவர் சார்பில்நானே உங்கட்குக்கூறிப்,பின், என்விளக்கத்தையும் தருகின்றேன். எதுசரிஎன்பதை முடிவுகட்டுவது உங்கள்பொறுப்பு.

'தோடுடைய செவியன்' என்றுசிவனைக்குறிப்பிட்டதன் பொருள் என்னையெனில், சிவனுடைய தலையிற் சடையிருக்கும்; நெற்றியில் ஒருபாதி திருநீற்றுத்[illegible]பண்டரத்தோடுவிளங்கும், மற்றப்பாதியில் குங்குமப் பொட்டிருக்கும்; கண்களில் இடக்கண் மைதீட்டப்பெற்றிருக்கும்; மூக்கின் இடதுபக்கத்தில் மூக்[illegible]ருக்கும்; காதுகளில் வலது செவி [illegible]றும், இடதுசெவி தோடணிந்தும் [illegible]படும்; முகத்தில் வலதுபக்கத்தில் மீசையும் இடதுபக்கத்தில் மீசையில்லாமலுமிருக்கும்; கழுத்தின் வலதுபக்கம் அக்கமணி-எலும்பு மாலை-பாம்பணியோடும், இடதுபக்கம்அட்டிகையோடும் காட்சியளிக்கும்; கைகளில்இடதுகை வளையலணியப்பெற்று மிருதுவாக இருக்கும், வலதுகை வலுவும் முறுக்கும் பெற்று விளங்கும்; மார்பின் இடதுபக்கத்தில் ஒருமுலையும் அதனை மறைக்கும் கச்சும் காட்சியளிக்கும், வலதுபக்கத்தில் யானைத்தோற்போர்வையும் அக்கமணி மாலையும் மிளிரும்; இடுப்பில் ஒருபாதி சேலையும் அதன்மேல் ஒட்டியாணமும், ஒருபாதி புலித்தோல் ஆடை அணியப்பெற்றும் அழகுபடுத்தப்; கால்களில்இடதுகால் சதங்கை கொலுசுகளுடனும், வலதுகால் மிதியடியுடனும் காட்சியளிக்கும்; உடம்பில் காலிலிருந்து தலைவரையில் ஒருபாதி பச்சை நிறமாகவும், மறுபாதி சிவப்பு நிறமாகவும் தோற்றமளிக்கும். இவ்வடிவத்தின் இருக்கைஅதாவது ஆசனம், வலதுபக்கம் காளைமுகமும்இடதுபக்கம் சிங்கமுகமுமாகச்சிறந்து விளங்கும். ஆகவே, இவ்வடையாளங்களோடுள்ள ஒருவன் யாவனோ, அவனே சிவன் அவனே அம்மையாய் அப்பனாய்-அம்மையும் அப்பனும் ஒரேவடிவமாய் விளங்கும் ஒப்பற்றகடவுள் என்பதாகச் சிவஇலக்கணமும், அதனைப்படித்து-ஒப்புக்கொண்டு நம்பி வழிபடும் சைவமெய்யன்பர்களும் கூறும் உண்மையாகும். ஆனால், மேலே சொல்லப்பட்ட இவ்வடையாளங்களோடுள்ள ஒருவடிவத்தை ஆணென்றுகருதுவதா? பெண்ணென்று கொள்வதா? அலியென்று கூறுவதா? ஆணுமல்லப், பெண்ணுமல்ல, அலியுமல்லாத இத்தகைய ஒருவடிவம் இயற்கை அமைப்பில் இருக்கமுடியுமா? ஒருக்கால், இத்தகைய ஒருவடிவம் இருக்கிறதென்றேவைத்துக் கொண்டாலும், இவ்வடிவத்திற்குச்சொல்லப்படும் உடலமைப்புக்களையும் உண்மையென்றே ஒப்புக்கொண்டாலும், ஒரு உடம்பில் இன்றியமையாது அமைந்திருக்கவேண்டிய சில உறுப்புக்களும்அவை தம்தொழில்களும் இச்சொல்லப்பட்ட உடம்பில் எங்ஙனம் அமைந்து எவ்வாறு தொழில் செய்கின்றனவென்பதையும் தெளிவுபடக்கூறவேண்டுமன்றோ! எடுத்துக்காட்டாக, ஆணையும் பெண்ணையும் ஒன்றாக இணைத்து, ஆண் உறுப்புக்களில் ஒவ்வொன்றையும், பெண்உறுப்புக்களில் ஒவ்வொன்றையும் அந்தந்தப் பக்கங்களில் அமைத்துக்காட்டப்படும் இவ்வடிவத்திற்கு இன்றியமையாது இருக்கப்படவேண்டியவையான ஆண்குறி—பெண்குறி—பிட்டம் ஆகிய உடலுறுப்புக்கள் இச்சொல்லப்பட்ட வடிவத்தில் எங்ஙனம் அமைந்துள்ளன? அவை செய்ய வேண்டிய தொழில்கள் முறையே நடைபெறுகின்றனவா? ஆம். என்றால், இவ்வடிவத்திற்கு அமைத்துக்காட்டப்பட்டிருக்கும் ஏனை உறுப்புக்கள் போன்றதானே நாம் கூறும் இவ்வுறுப்புக்களும் அமைந்திருக்கமுடியும்! அதாவது, ஆண் உறுப்புக்கள் இரண்டில் ஒன்றும், பெண் உறுப்புக்கள் இரண்டில் ஒன்றுமாக எடுத்துச்சேர்த்து ஒன்றாக்கி, ஆணையும் பெண்ணையும் ஒரே வடிவத்தில் காட்டுவது போல, நாம்கூறும் இவ்வுறுப்புக்களையும் அங்ஙனம் அமைக்கமுடியுமா? ஒருக்கால், பிட்டத்தை அவ்வாறு அமைத்துக்காட்ட முடியுமென்று வைத்துக்கொண்டாலும், ஆண் பெண் குறிகளை அங்ஙனம் அமைத்துக்காட்டுவது யாங்ஙனம் இயலும்? உடம்பிலுள்ள ஏனை உறுப்புக்களைப் போல ஆண் பெண் குறிகளும் இரண்டிரண்டாய் இருந்தாலன்றோ, அதில் ஒன்றும் இதில் ஒன்றுமாக எடுத்து இணைக்க முடியும்! ஆனால் இருப்பது ஒவ்வொன்றுதானே 'ஒவ்வொன்றாய் இருந்தால்என்ன? ஆண் குறியில் பாதியும் பெண் குறியில் பாதியுமாக எங்கள் அப்பன் காட்சியளிக்கிறார்' என்றால், இச்சொல்லப்பட்ட பாதி பாதி உறுப்புக்கள் குறுக்களவிலா நெட்டளவிலா எடுத்தமைக்கப்பட்டுள்ளனவென்ற கேள்விஒருபுறமிருக்க, அவை எந்த அளவில்—எந்த முறையில் எடுத்து அமைக்கப்பட்டிருந்தபோதிலும், அவை, அதனதன்தொழிலை முறையே செய்கின்றனவா—செய்யமுடியுமா என்பதே எமது கேள்வியாகும். இச்சொல்லப்பட்ட இரு உறுப்புக்களாலும் இன்றியமையாது செய்யப்படவேண்டிய தொழில்கள் இரண்டில், மிக மிக இன்றியமையாததான சிறுநீர் கழிக்கும் தொழிலை, ஆணிற்பாதியும் பெண்ணிற் பாதியுமாக எடுத்தமைக்கப்பட்ட அக்குறிகள் எந்த முறையில் செய்கின்றனவென்பதற்காவது விடையிறுக்கவேண்டாமா?

எடுத்துக்காட்டாகப், பால் சுரக்கக் கூடியமுலைகள் அமைந்துள்ள வடிவத்தில்காணப்படும்மற்றைய உறுப்புக்களும் அதனதன் தொழிலைச்செய்துகொண்டு தானேஇருக்கவேண்டும்! அங்ஙனமன்றி, ஒரு உடம்பிலுள்ள ஒரு கருவி அதன் தொழிலை ஒழுங்காகச்செய்வதும், அதே உடம்பிலுள்ள மற்றைக்கருவிகள் அவற்றின் தொழிலைநடத்தாமல்இருப்பதும் உடலமைப்புமுறையில் நிகழக்கூடியகாரியங்களா? மேலிடத்திலிருந்து பால் சுரக்கும்போது, மறைவிடத்திலிருந்து சிறுநீரும்வெளிவரத்தானேவேண்டும்! அங்ஙனமேவருகின்றதென்று வைத்துக் கொண்டாலும், ஆணிற்கொஞ்சமும் பெண்ணிற்கொஞ்சமுமாக எடுத்தமைக்கப்பட்ட அந்த மறைவிடக்குறி அதன் தொழிலை எந்தமுறையில் செய்கின்றதென்பதையும், அக்குறிவழியாகவெளிப்படுகின்ற சிறுநீர், அவ்வுடம்பில் எந்தப் பக்கத்தில்தங்கியிருக்கிறது? ஆண்தன்மையைக்குறிக்கும்பக்கத்திலா? அல்லது பெண் தன்மையைக்குறிக்கும் பக்கத்திலா? அன்றி, இரண்டுக்கும் நடுவிலா? என்பதையும் ஓரளவுக்காவது விளங்க உரைக்கவேண்டாமா?

"இவையெல்லாம் அடாவடியான கேள்விகள்; கேட்கப்படவேண்டிய கேள்விகளே அல்ல.'எங்கள் அப்பன் ஆணுக்

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 4—2—45 ஞாயிறு


## கடைசி ஆயுதம்!

—:o:—

'என் செயலால் ஆவதொன்றுமில்லை இனித் தெய்வமே, உன் செயலேஎன்றுஉணரப்பெற்றேன்' என்று இவ்வுலக வாழ்வை நீத்து அவ்வுலக வாழ்வை நத்தி நின்று நாதனைப்பாடித் தொழுதாராம் நம் நாட்டு நாவலர் ஒருவர். 'அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை, என் நெஞ்சுறுதி ஒன்றுமட்டுமே போதும் இந்தச் செஞ்சேனையின் செருக்கை அடக்க' வென்று, செருப்புத் தைப்பவனுக்கும் செங்கோலோச்சுபவனுக்கும் செய்தொழில்வேற்றுமையால்சிறப்பொவ்வாவென்ற செம்மை மொழிக்கு இலக்காகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்ற வீர ஸ்டாலின் நாட்டை எட்டே நாளில் பிடித்துவிடுகிறேன் என்று எக்காளமிட்ட ஹிட்லருக்கு, நாம்மேலே தீட்டிய பாட்டு எப்படியோ கிட்டிவிட்டது.

'விஞ்ஞான விற்பன்னர்களே! என்னுடையவும் என் நாட்டினுடையவும் எதிர்காலம் உங்கள்கையிலேயே தங்கியிருக்கிறது. நீங்கள் கண்டுபிடித்து உண்டாக்கித்தரும் புதுப்புதுப் போர்க் கருவிகளின் துணைகொண்டே என் மக்களும் என் நாடும் பாதுகாக்கப்படவேண்டு'மென்று இதற்குமுன் ஏற்பட்ட நெருக்கடிக்காலங்களிலெல்லாம், 'என் நெஞ்சுறுதி ஒன்றுமட்டுமே போதும்என்று கூறியதையும் மறந்து, விஞ்ஞானிகளிடம் தஞ்சம் புகுந்து கெஞ்சி நின்றார். ஆனால், செஞ்சேனைப் பலத்துக்கு வித்தாகவுள்ள ரஷ்ய விஞ்ஞானம் ஜெர்மன் விஞ்ஞானத்தை மிஞ்சி மேலோங்கி ஞாலம் புகழும் நிலையைக்கண்ட ஹிட்லர், இன்று தம் பழைய வீராவேசப் பல்லவிகளை மாற்றிக் கொண்டு, "கடவுள் நம் மக்களைப் படைத்தார்; அவர்களைப் பாதுகாப்பதன் வாயிலாகக் கடவுளது செயலைப் பாதுகாக்கிறோம்" என்று கடவுளுக்குக் கட்டியம் கூறுகிறார்,

"உன்செயலால் ஆவது ஒன்று
மில்லை இனித் தெய்வமே!
என் செயலே என்று உணரப்
பெற்றேன்"

என்ற எழுச்சிமிக்க உணர்ச்சியைத் தம் நாட்டுமக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணி போற் பதியவைக்கும் பண்பைப் பெற்ற லெனின் ஆணைவழி செல்லும் செஞ்சேனை பர்லின் நகரை ஆயுதபலத்தோடு அணுகிவரும் சமயத்தில்.

கடவுளைப்பற்றிய கவலையே இல்லாமல், கருத்துரமும் போர்க்கருவிப் பலமும் கொண்டே பகைவர்களைச் சிதறடிக்கவல்லசெஞ்சேனை, ஜெர்மனி நாட்டுக்குள் புகுந்து, பல நகரங்களைக் கைப்பற்றி, அதன் தலைநகரான பர்லினைக் காற்றோடு சேர்ந்தநெருப்பென நெருங்கிவரும் சமயத்தில்தான், கடவுளைநாடுகிறார் வேறுகதியற்றஹிட்லர். கடவுளாற் படைக்கப்பட்ட மக்களும், கடவுள் செயலும்; கடவுள் செயலுக்குக்காப்புக்கட்டித்தங்கள்கருத்தை வேறுவகையிலே திருப்பித்திக்கெட்டும் புகழும்படி திறமுடன் போர் புரிந்துபெருமிதமான வெற்றியோடு செஞ்சேனை முன்னேறுவதைக் கண்டு, அவை பின்வாங்குகின்றனவே என்பதை நாஜித் தலைவன் நன்றாக அறிந்தும், கடைசி ஆயுதமாகக் கடவுளின் உதவியை நாடுவது அவரது பரிதாபத்திற்குரியநிலையையே வெளிப்படுத்துகின்றதுஎன்போம்.

—

## தோடுடைய செவியனை

5-ம் பக்கத் தொடர்ச்சி.

கும் பெண்ணுக்கும் வேறுபாடு உண்டாக்கி உயர்வு தாழ்வு கற்பித்தல் உலகோர்க்கு அடாத செயல் என்பதைஎடுத்துக்காட்டவே ஆணும் பெண்ணும் ஒன்றாக அமைந்த வடிவத்தில் விளங்குகிறார்; இந்த உயரிய நோக்கம் எங்கள் அண்ணலிடமிருப்பதை அறிந்துகொள்ள முடியாத நீ, ஏதேதோ வாயில் வந்ததை எல்லாம் உளறிக்கொட்டுகிறாய், அடாது இச்செயல் உனக்கு" என்று சைவசமய மெய்யன்பர்கள் என்மீது சீற்றம் கொண்டால், அச்சீற்றத்துக்கு நான் ஆளாகாதபடி சைவ இலக்கணம் என்னைக் காப்பாற்றுகின்றதென்பதையும் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். எப்படி என்றால், 'கல்லை வணங்கு, அங்கே கடவுள் இருக்கிறார். செம்பை வணங்கு, அங்கே சிவன் இருக்கிறார். பித்தளையைவணங்கு, அங்கே பிறைசூடி இருக்கிறார். மண்ணை வணங்கு, அங்கே மகேசுவரன் இருக்கிறார். மரத்தை வணங்கு, அங்கே மாதேவன் இருக்கிறார். சாணியை வணங்கு, அங்கே சதாசிவன் இருக்கிறார். பசுவை வணங்கு, அங்கே பார்வதி இருக்கிறாள். பன்றியை வணங்கு, அங்கே பரந்தாமன் இருக்கிறார். ஆட்டை வணங்கு, அங்கே அறுமுகன் இருக்கிறார். அறுகம்புல்லை வணங்கு, அங்கேஆனைமுகன்இருக்கிறார். பாம்பை வணங்கு, அங்கேபரமன் இருக்கிறார். கருடனை வணங்கு, அங்கே கண்ணன் இருக்கிறார். அரசமரத்தைவணங்கு, அங்கேஅரன்இருக்கிறார். வேப்பமரத்தை வணங்கு, அங்கேவேதநாயகிஇருக்கிறாள். அரசமரத்தையும் வேப்பமரத்தையும் சேர்த்து வணங்கு, அங்கே அரனும் அம்மையும் ஒன்றாக இருக்கின்றனர். என்பவை, மக்கள் கடவுளை வழிபடும் முறைகளை வகுத்துக்காட்டும் கடவுள் இலக்கணங்களாகும். இச்சொல்லப்பட்ட முறைகள் அனைத்தும்அன்றுமுதல்இன்றுவரை கடவுளை நம்பி வழிபட்டு வரும் மக்களால் கையாளப்பட்டே வருகின்றன. இம்முறைகளில் ஒன்றுகூட, 'இது வழிபாட்டுக்குஉரியதுஅன்று' என்று அம்மக்களால் நீக்கப்படவேயில்லை. இந்த நிலையில், ஆணையும் பெண்ணையும் ஒரே வடிவத்தில் அமைத்துக்காட்டிக் கடவுள் உண்மையை விளக்கும் ஒரு அலங்கோலக்காட்சி, அர்த்தநாரீசுவரர் என்றபெயரோடு ஏன் தோற்றமளிக்க வேண்டும்? கல்லிலும் மண்ணிலும் கட்டையிலும் கடவுள் இருக்கிறார் என்று நம்பி வழிபடும் மக்களுக்கு, ஏதாவது ஒருமட்டையைக்காட்டி, 'இதில் அர்த்தநாரீசுவரவடிவம்இருப்பதாக நினைத்து வழிபடுங்கள்' என்று சொன்னால் போதுமே, மதிசூடியும் மாதுமையும் அந்தமட்டைக்குள் இருப்பதாக எண்ணி, அதற்குக் குட்டிக்கரணமும் கும்பிடும்போட்டு வழிபடுவார்களே! அங்ஙனம்செய்வதைவிட்டு ஆணும் பெண்ணும் அலியுமற்ற ஒரு ஆளை உண்டாக்கி, அதற்கிருக்கவேண்டிய உறுப்புகளை அலங்கோல முறையில் அமைத்து 'இது எங்கள்—உங்கள் கடவுள், இதனை வணங்குங்கள்' என்று கூறுவதன் வாயிலாக எம்போன்ற பகுத்தறிவாளர்க்கு இதுபோன்ற ஆராய்ச்சி வேலையையும், நாம் இங்ஙனம் எழுதுவதால், 'இவன் இங்ஙனமெல்லாம் எழுதுகின்றானே! நம் குட்டு வெளிப்படுகின்றதே' என்று கடவுளன்பர்கட்குக் கவலைமிக்க தொல்லையையும், அதனால் ஏற்படுகின்ற சீற்றத்தை எம்போன்றார் மீது செலுத்துகின்ற இரங்கத்தக்க நிலையையும், ஏன் உண்டாக்குதல் வேண்டும்? எனவே இன்னும் இதுபற்றி அதிகம்எழுதி அன்பர்களின் காலத்தைவீணாக்காமல், இதனை இவ்வளவில்நிறுத்தி, இனித்தோடுடைய செவியனைப்பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்து எழுதுவாம்.

—: (0) :—

# பாகிஸ்தான்-ஒரு ஆராய்ச்சி

(பேட்ரிக்லேஸி)

இந்திய முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பாகத்தினர் வங்காளத்திலும், அதனைச்சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். வங்க மாகாணத்திலும் இவர்களே பெரும்பான்மையினராக வசிக்கின்றனர். இந்த நிலைமையிலேயே அங்குள்ள ஒரு முஸ்லீம் மந்திரி சபையை அகற்றப்படவேண்டுமென முயற்சிக்கப்பட்டது. ஒரு பஞ்சாபிஹிந்து, ஒரு மதராஸிஹிந்துவிடம் பாராட்டும் அன்னியோன்னியத்தைக்காட்டிலும், ஒரு வங்க முஸ்லிம் தனது ஹிந்து நண்பர்களுடன் அதிக அன்னியோன்னியம்பாராட்டுகிறார். ஆதலால் அந்தப் பிரதேசத்தைப் பாகிஸ்தானுடனாவது, அல்லதுபர்மாவைப்போன்று பிரிக்கப்பட்ட மாகாணமாகவாவது சேர்த்து விடுதல் மிகப்பொருத்தமாகும். அவ்வாறில்லாவிடில் இதனை மத்தியநிலையத்தின்கீழ் கொண்டுவந்து விடலாம்.

காஷ்மீர், ஒரு ஹிந்து அரசரின்சமஸ்தானமாயிருப்பதால், அது ஒரு ஹிந்து சமஸ்தானமெனக் கூறப்படுகிறது. இது பாகிஸ்தானின் பெரும்பாகப்பிரதேசமாயிருப்பினும் இதன் ஜனத்தொகை வெகு சொற்பமானதேயாகும். இந்தச்சமஸ்தான ஜனத்தொகையில் 90-சதவிகிதத்தினர் முஸ்லிம்களாகவேஇருக்கின்றனர். இவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இப்பிரதேசம்பாகிஸ்தானுடன் சேர்க்கப்படுவது நியாயமே.

ஹைதராபாத் சமஸ்தானம் ஒருமுஸ்லீம் சமஸ்தானமாயிருந்தும், அது இந்துப் பெரும்பான்மையினரைக்கொண்டதாக இருப்பதால் அப்பிரதேசம் இந்துஸ்தான் பிரதேசத்துடன் சேர்க்கப்படுகையில், காஷ்மீர் பாகிஸ்தானுடன்சேர்வது பற்றி ஆட்சேபனையில்லையல்லவா?

இந்தத்திட்டம் வகுப்புப் பிரச்சினையை அறவே அகற்றிவிடுமென்பதற்கான காரணத்தைக்கீழேவிளக்குவோம்.

பாகிஸ்தான் பிரிவினைத்திட்டப்படியான 'ஹிந்து இந்தியா' 'முஸ்லிம் இந்தியா' ஆகிய இரு பிரதேசங்களிலும் முறையே முஸ்லிம் சிறுபான்மையினரும், ஹிந்துச்சிறுபான்மையினரும்இருப்பரென்பது திண்ணம்.

பாகிஸ்தானில்: 250 லட்சம் முஸ்லிம்களும் 60 லட்சம் ஹிந்துக்களோ அல்லது சீக்கியர்களோ இருப்பர்.

ஹிந்துஸ்தானில்: (வங்காளம் உட்பட) 2250 லட்சம் ஹிந்துக்களும் 555 லட்சம் முஸ்லிம்களும் இருப்பர். (வங்காளம் நீக்கி) 2230 லட்சம் ஹிந்துக்களும் 275 லட்சம் முஸ்லிம்களுமிருப்பர்.

இவ்விருபிரதேசங்களிலுமுள்ளபெரும்பான்மையினர், மற்றொரு பிரதேசச்சிறுபான்மையினரின்கதியைநினைத்துத், தங்கள் பிரதேசங்களின்சிறுபான்மையினரை நியாயமான முறையில் நடத்துவரென எதிர்ப்பார்க்கலாம். ஒரு பிரதேசத்தில் சிறுபான்மையினராயிருப்போர், மற்றப் பிரதேசப் பெரும்பான்மையினரின் நடைமுறைகட்கு வழிகாட்டியாயிருக்கலாம். இதனால் இன்று இந்நாட்டிலிருந்துவரும் வகுப்புப் பிரச்னை அடியோடுநீக்கப்பட்டு "இந்து இந்தியா" "முஸ்லிம் இந்தியா" ஆகிய இரு பிரதேசங்களும், மத்தியஸ்த நிலையத்தின் உதவியால் பரஸ்பரம்ஒன்றுபட்டு ஒற்றுமையடைந்துவிடும்.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய முஸ்லிம்களின் நெருக்கடியான நிலைமையை நன்குணரவேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவியைவிட்டு விலகிய காலத்தில் இந்தியா முழுமையிலுமுள்ள முஸ்லிம்கள் மன ஆறுதல் கொண்டு மகிழ்ச்சி கொண்டாடினர். ஒரு அ. இ, சமஷ்டி சர்க்காரிலும்சரி, பார்லிமெண்டரிஆட்சி முறையிலும் சரி, தங்கள் இந்துக்களின் தாட்சண்யத்தை எதிர்நோக்கி நிற்க வேண்டி நேரிடுமென இந்திய முஸ்லிம்கள் கருதுகிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலுள்ள சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குப் பணியாமல் சமத்துவமுறையை எவ்வாறு வற்புறுத்துகிறார்களோ, அதுபோன்றே இந்தியமுஸ்லிம்களும், ஹிந்துச் சிறுபான்மையினருக்குப்பணிய மறுத்துச்சமத்துவஉரிமை கோருகின்றனர். மிகச்சிறிய நாடாகிய பாலஸ்தீனில் யூதர்கள் அராபியருடன் சமத்துவ உரிமைகோரும் நிலைமையில், அதைவிடப் 18 மடங்கு பெரியதாயிருக்கும் இந்நாட்டில் முஸ்லிம்கள் சமத்துவ உரிமை கோருவதில் குற்றமொன்றுமில்லையல்லவா? இதன்காரணமாகவே ஜனாப் ஜின்னாவும், இந்திய முஸ்லிம்களும் பிரிவினையைக் கோருகின்றனர்.

பாகிஸ்தான் திட்டத்தால் இந்தியப் பொருளாதாரப் பிரச்னைஎவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாது. ஏனெனில் ஹிந்துஸ்தானில் எல்லாச்செல்வநிலைமையும் ஒருங்கே பொதிந்துள்ளது. பாகிஸ்தானிலோவெனில், பஞ்சாப், காஷ்மீர் முதலியவைகளின் செல்வவளர்ச்சியைப் பற்றி நாம் சற்றும் பயப்படவேண்டியதில்லை. தவிரச், சிந்து மாகாணத்தில்விவசாயம், கைத்தொழில் முதலியவற்றை வளர்ச்சியடையச்செய்யப்பெரும்திட்டங்கள்போடப்பட்டுள்ளன. ஆதலால்பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் ஆகிய இரண்டு பாகங்களும் அதனதன் பிரதேசத்திற்குப் போதுமான செல்வநிலைமையில் பிறாது தயவை எதிர்பார்க்கவேண்டிய அவசியமின்றி இருந்துவரும்.

இந்தப் பிரிவினைத் திட்டத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளில் மிகமுக்கியமானது, வடமேற்கெல்லைப்புறத்தகராறு தீர்ந்துவிடுவதேயாகும். சுமார்53 ஆண்டுகட்கு முன்னர் இந்திய சர்க்கார், பஞ்சாப் சர்க்காருக்கு வரைந்துள்ள கடிதமொன்றில்,

"வடமேற்கெல்லைப்புற மக்களை இந்தியப் பாதுகாப்பைமுன்னிட்டு ஒன்றுபடுத்தவேண்டியகாலம் வந்துவிட்டது"

எனக் குறிப்பிடப்பட்டது. இவ்வார்த்தை ஆழ்ந்த அர்த்தபுஷ்டியுடையது. இப்போதோவெனில் இவ்வார்த்தை பூரணமாக அமுல்நடத்தப்படப் பாகிஸ்தான் திட்டம் பெரும்சாதனமாயிருக்கிறது. 1940 ஜூலைமாதம் பார்லிமெண்டில் செய்யப்பட்ட அறிவிப்பின்போது,

"பாகிஸ்தான் பிரதேசத்தில்சென்ற ஏழாண்டுகளாக நடைபெற்ற கலவரத்தின் காரணமாக 113 இராணுவத்தினர் இறந்தும் 377 பேர் காயமுண்டும்போயினர்"

பாலஸ்தீன் நாட்டின் கலவரங்களையடக்க நாம் 20000 இராணுவத்தைப் பயன்படுத்தினோம். எனினும் எல்லைப்புறத் தகராறைத்தீர்க்க 40,000 பேர்களைப் பயன்படுத்தவேண்டிநேரிட்டது. இவர்களில் 306 பேர் கொல்லப்பட்டும், 888 பேர் படுகாயமுண்டும்போயினர். இப்போது நமது இராணுவம் ஒவ்வொன்றும் ஜெர்மனி யுத்தத்தில் ஈடுபடவேண்டிநேரிட்டிருப்பதால் வஜீரிஸ்தான் பிரச்னை பெரும்நெருக்கடியாயிருக்கிறது. பாகிஸ்தான் திட்டப்படி இந்தியப் பிரிவினை வாக்களிக்கப்படுமாயின் எல்லைப்புறப் பிரச்னை தீர்ந்துவிடுவதுடன், எல்லைப்புற முஹம்மதியர்களின் ஆதரவும் நமக்குக்கிடைக்கும். எல்லைப்புறத்தில் சென்ற 10 ஆண்டுகளாக ஏற்பட்டநஷ்டம் இன்றைய யுத்தத்தில் 36 மணிநேரத்தில் ஏற்படும் நஷ்டத்தைவிடக்குறைவே எனினும், இந்தியாவைப் பொறுத்தவரை இது அதிகமென்றே கருதப்படவேண்டும்.

வஜீரிகள் கிளர்ச்சிசெய்யும் இலட்சியத்தைப் பாகிஸ்தான் முஸ்லிம் சர்க்கார் கவனிக்கும்படி விடுவதில்லையென்று மில்லை. எல்லா வஜீரிகள் முஸ்லிம்களாகவேஇருப்பதால் முஸ்லிம் சர்க்காரின் ஆட்சிக்குப்பணிந்து அவர்களின் உத்தரவுப்படி பிரிட்டனுக்காதரவளிப்பரென்

(8-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான்

7-ம் பக்கத் தொடர்ச்சி

பதில் சந்தேகமில்லை. இதனால் எல்லைப் புறமக்கள் தங்களின் காட்டுமிராண்டித் தனத்தை விட்டொழித்து நாகரிகமடைந்துவிடுவர், ஒரு சிலர் பாகிஸ்தான் பிரிவினையின்றியே இது தீர்க்கப்பட்டு விடுமெனக்கருதுவாராயின் அது பெருந் தவறேயாகும்.

பாகிஸ்தான் என்பது ஒரு பகற்கனவாகவும், இன்னும் அதைவிடக் கேவல்மாகவும் கருதப்படலாம். பாகிஸ்தான் திட்டத்தை எல்லா இந்துக்களும் வெறுத்துக்கண்டிப்பதாகக்கூறிவிடமுடியாது. காங்கிரசல்லாத பலகோடி இந்து மக்கள் இந்தியப்பிரிவினையை விரும்புகிறார்கள்.

பிரிட்டிஷார், இந்தியாவைப் பிரிப்பதில் கஷ்டமொன்றுமில்லை. ஏற்கனவே பிரிக்கப்பட்டிருந்த இந்தியாவை இப்பிரிட்டிஷாரே, ஒன்றுபடுத்திவைத்தனர். இதுபோன்றேஅதைப் பிரித்துக்கொடுப்பதில் அவர்கட்குக் கஷ்டமேகிடையாது. பிரிட்டிஷார் இந்தியாவின் பெரும்பாகத்தை முஸ்லிம்மொகலாயர்களிடமிருந்தேகைப்பற்றினர். அவர்கள் இந்துப்பிரதானிகளுடன் போரிட்டுச் சிலபாகங்களைக் கைப்பற்றினர். இந்திய நாடு வடக்கே கில்ஜிட்டிலிருந்து தெற்கே திருவனந்தபுரம்வரையிலும், மேற்கே குவெட்டாவிலிருந்து கிழக்கே கல்கத்தாவரையிலும் எக்காலத்திலும் ஒற்றுமையாயிருந்ததில்லை, பிரிட்டிஷ்ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டபிறகே இவ்வொற்றுமைஏற்பட்டது, அநேகவேறுபாடுகள் அடியோடு ஒழித்துவிடப்பட்டன. எனினும் ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே இருந்துவந்த பிரதம வேறுபாடு இன்னும் இருந்துவருகிறது; இனியும் இவ்வாறே இருந்துவரும். ஆகலால் இவ்விரு சமுகத்தில் ஒன்றை மற்றொன்றுக்குப் பணியும்படிசெய்வது அசாத்தியமான காரியமாகும்.

நான் மேலேகூறிய காரணங்களைக் கொண்டு, இந்தியாவைப் பிரிவினைசெய்யக்கூடிய திட்டம் சிறப்புடையதா? அல்லவா? என்பதைவாசகநேயர்கள்ஆராய்ந்தறிவார்களாக!

பிரிட்டிஷ் சர்க்காரும் இவற்றை நன்கு பரிசீலனைசெய்து இந்தியாவுக்குச் சுயேச்சை வழங்கப்படவேண்டிய அவசியம்நேரிட்டால், பாகிஸ்தான் திட்டப்படி அந்நாட்டை இரண்டு தனிதனி நாடுகளாகப்பிரித்துத் தனித்தனி சுயேச்சைவழங்கி, இவ்விருபிரதேச சர்க்கார்களுக்கிடையே மத்தியஸ்தமாயிருந்து சேசஉ வேற்படுத்துவதே சிறப்புடையதாகுமெனக்கருதுகிறேன்.

---

# செய்தித் திரட்டு.

### காஞ்சி.

28-1-45ல் சென்னை ஆவிஜனுப் அப்துல் அமீத்கான் தலைமையில் பீடித்தொழிலாளர்கூட்டம் நடந்தபோது அவருடன் வந்திருந்த பலதோழர்களும், காஞ்சி எ. கே. தங்கவேலரும், டி. பி. எஸ். பொன்னப்பனும் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்படவேண்டியதுமிக அவசியமென்றும் முதலாளிகள் தொழிலாளிகளுக்குக் கூலியைஉயர்த்தவேண்டுமென்றும் அறிவுறுத்தினர். பிறகு பீடித் தொழிலாளர்கள் எல்லோரும் கே. இனயதுல்லாகான் சாகிபுக்கும் L. முகம்மது சர்வர்சாகிபுக்கும் மாலைசூட்டிமகிழ்வித்தனர்.

21—1—45ல் இவ்வூர் திராவிடர்கழகத்தின் ஆதரவில் விடுதலைவீரர் தோழர் லெனின் நினைவுநாளையொட்டி எல்லோருக்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டுப் பிறகு தோழர் டி. பி. எஸ். பொன்னப்பா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஈழத்தடிகள், சி. வி. ஏகாம்பரம், சி. வி. இராசகோபால், ஜி. சீனு, ஆபீஸா, சி. என். அண்ணாத்துரை, ஆகியோர் லெனினுடைய உணர்ச்சி, எழுச்சி, கிளர்ச்சிகளைப் பெரிதும் பாராட்டிப்பேசினர்.

### பூந்தோட்டம்.

31—12—44ல் ஷையூர்த் திராவிட இளைஞர் கழகத்தின் சார்பாகத் தோழர் ஆதிமூலம் தலைமையில்நடந்த பொதுக் கூட்டத்தில் பலதோழர்கள் கடவுள், மதம், புராணம் என்பவைகளைப்பற்றி விரிவுரையாற்றினர்.

### சின்னாளப்பட்டி

2—1—45ல் இவ்வூர்த் தோழர் எஸ். சேதுபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் தவமணியரசு, ஆகியோர் திராவிடநாட்டுப்பிரிவினைப்பற்றிப் பேசினர்.

### சேலம்

14—1—45ல் செவ்வாய்ப்பேட்டைத் திராவிடர்கழக 2-வது ஆண்டுவிழா தோழர் எஸ். மீனாட்சிசுந்தரம் B. A. L. T., தலைமையில் சிறப்புடன் நடந்தது. விக்டோரியா மார்க்கெட்மைதானத்தில் தோழர் கே. செகதீசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பெரியார், அன்பழகன், சனார்த்தனம், முரலியோர் நீண்டநேரம் பேசினர்.

### திருப்பத்தூர்

6—1—45ல் இவ்வூர் சுயமரியாதைச் சங்க ஆதரவில்தோழர் டாக்டர் எ. சண்முகம் தலைமையில் கூடிய கூட்டத்தின் போது சி டி. நாயகம், இழப்பைப்பற்றி அனுதாபமும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சிறுவாரைப்பூர்

7—1—45ல் இவ்வூரில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டனர்

### சூலூர்

3—1—45ல் ஷையூர் திராவிடர்கழகக் கமிட்டிக்கூட்டம்கூடி சோம்சன் தியேட்டரில் எதிரிகளால் நடத்தப்பட்ட கூட்டத்தையும் சென்னைத் தமிழிசைக்கூட்டத்தில் கூத்தரசன் சிலை வைத்ததையும் கண்டித்துத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மதுக்கூர்

31—12—44ல் இவ்வூர் என். எம். பி. பி. சபாவின் 1945-ம் ஆண்டுக்கு தோழர் என். கே. இ. எஸ். தலைமையில் புதிய அலுவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நினைவுக்குறியாகத் "திராவிடநாடு" இதழுக்கு ரூ. 1, நன்கொடை தரப்பட்டது.

### நீடாமங்கலம்

17—1—45ல் இவ்வூர் சுயமரியாதை இலவச வாசகசாலையின் ஆண்டு விழா பெரியார் அவர்கள் தலைமையில் நடந்த போது தோழர்கள் கே. கே. நீலமேகம், சி. பி. சிற்றரசு ஆகியோர் பேசினர்.

### பிறப்பு.

1-1-45ல் நமது இயக்கக் கவிஞர் திண்டுக்கல் தோழர் எம். ஆர். மத்திரன் மனைவியார் கோவிந்தம்மாளுக்கு ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலமே.

### பெயர் மாற்றம்

குடந்தை மாணவத் தோழர் வி. வே. சாமிநாதன் தமது பெயரை பெரியார் ஆண்டு 66-வது தைத்திங்கள்முதல்நாள் முதல் வி. வே இளஞ்சேழியன், என மாற்றிக்கொண்டார்.

### நாமகிரிப்பேட்டை.

9—1—45ஷையூர்த் திராவிடர் கழகத்தின்ஆதரவில் தோழர் செ. முத்துகிருஷ்ணன் தலைமையில் நடந்தகூட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும் மாணவமணிகள் பல அரிய கருத்துக்களைப்பற்றிப் பேசிய பின் தோழர் C. D. நாயகம், சித்தையன் தந்தையார் ஆகியவர்கள் மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### செய்யாத்துவிண்ணன்.

7—1—45ல் இவ்வூர்த் தோழர் அ. இராமலிங்கம் தலைமையில் ஒரு கூட்டம் கூடித் திராவிடர்க் கழகம் திறக்கப்பட்டதுடன் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### வாழ்துடை.

14—1—45ல் இவ்வூர்த்திராவிட கழகத்திற்குச் சென்னைததோழர் K. G. வெங்கடேசன் தலைமையில் கூடிய கூட்டத்தில். 1945—46 ஆண்டிற்குக்கழகக் குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# தோடுடைய செவியனை நாடுவோரே!

ஈழத்தடிகள் பி. ஏ.,

இனிக், குளத்தங்கரையில் தனியாக விடப்பட்டு நின்ற சம்பந்தர் பசி மேலிட்டழுதார். அவ்வழுகையொலி குளத்துட் குளித்துக்கொண்டு நின்ற அவரது தந்தைக்குக் கேட்கவில்லை. ஆனால், அவ்வழுகைக்குரல் சிவனுடைய செவிகளுக்கு எட்டியது என்று சொல்லப்படுகிறது. பக்கத்தில் குளித்துக்கொண்டிருந்த சம்பந்தரின் தந்தைக்குக் கேட்காத அழுகையொலி, சிவனுக்கு எப்படிக் கேட்டது என்று யாராவது கேட்டால், 'அவனன்றி அணுவும் அசையாது' என்றமேற்கோளை எடுத்துக்காட்டிச், சிவன் எவ்வுயிரிலும் நீக்கமற நிற்கின்ற—எல்லா உலகமுமான ஒரு நிறைந்த பொருள்; ஆதலால் சம்பந்தரின் அழுகையொலி அவருக்குக் கேட்டதில் வியப்பொன்றுமில்லையே எனச் சிவ அன்பர்கள் கூறுவர். ஆனால், எல்லா உலகமுமாய்—எவ்வுயிரிலும் நீக்கமற நிற்பதாய்—அணுமுதல் அனைத்தையும் தாமே அசைவிப்பதாய் உள்ள சிவனும்; சம்பந்தர் பசியால் வெதும்பி விம்மி 'அம்மே அப்பா' என்றழுததும், அவ்வழுகை அரன் செவிக் கெட்டியதும், அரன் அம்மையை அழைத்ததும், அழுகைதீர அருளமுது (முலைப்பாலும் அருட்பாலும்) ஊட்டுக என்று ஆணையிட்டதும், அம்மை அதனைச் செய்ததும், அதன்பின்னர் அரன் அருள் புரிந்ததுமான நிகழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றமுறையிலேயே பேசப்பட்டுள்ளன. எப்படியென்றால், எல்லாமாய்—எங்குமாய்—எவ்வுயிரிலும் நீக்கமற நிற்பதாய்—அணு முதல் அனைத்தையும் அசைவிப்பதாய் உள்ள ஒரு பொருள், சம்பந்தரிலுமன்றோ நீக்கமற நிறைந்திருக்கவேண்டும்! ஆனால், இங்கு பேசப்படும் நிகழ்ச்சி அதற்கு இடமளிக்கவில்லையே! சம்பந்தர் தனியாகவும், சம்பந்தருக்கு அருள்புரிந்த சிவன் தனியாகவும் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி, இருவரும் இருவேறு தனித் தனி இடங்களில் இருந்ததாகவன்றோ பெரியபுராணம் கூறுகின்றது.

"........திருத்தோணிச் சிகரம்பார்த்தம்மே அப்பா' என்றென் றழைத்தருளி அழுதருள்" என்பதும், அவ்வழுகை கேட்டு,

"அந்நிலையில் திருத்தோணி வீற்றிருந்தார் அருள் நோக்கால்,
முன்நிலைமைத் திருத்தொண்டு முனிவர்க்கருள்புரிவான,
பொன்மலை வல்லியுந்தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்,
சென்னி இளம்பிறை திகழச்செழும் பொய்கை மருங்கணைந்தார்"

என்பதும் சேக்கிழார் கூறும் உண்மையாகும். இவ்வுண்மைகள், சம்பந்தரிலோ அல்லது சம்பந்தருக்கு அணித்தாகவேனுமோ சிவன் இருந்திருக்கவில்லையென்பதையும், சிவன், தோணிபுரமென்று அழைக்கப்படும் சீர்காழியிலுள்ள கோயிலிலிருந்து, சம்பந்தரின் அழுகையொலி கேட்டபின்னரே, அம்மையாருடன் காளைமீதமர்ந்து குளக்கரைக்கு வந்தார் என்பதையும் நன்கு படம் பிடித்துக்காட்டுகின்றன. இதனால், கடவுளின் 'எங்கும் நிறைந்துள்ள தன்மை' பொய் என்பதை எவரும் மறுக்கமுடியாது. சிவன் என்ற பெயரால் அழைக்கப்படும் கடவுள், உண்மையாகவே எங்கும் நிறைந்து நின்று—எதனையும் எவருடைய உதவியுமின்றித் தாமே தம் அருள்நோக்கு ஒன்றினாலேயே செய்து முடிக்கும் இயல்பினரென்றால், சம்பந்தர் பசியால் பதறி அழுகின்றார் என்று அறிந்தவுடனே, "சம்பந்தரின் பசி நீங்கக்கடவது" என்று அருள்நோக்கஞ் செய்திருக்கலாம். அங்ஙனஞ் செய்வதைவிட்டுக், கும்பகோணத்திலிருக்கும் தன் குழந்தை குடல் நோயால் வருந்துகிறான் என்று கேள்விப்பட்ட தந்தை தாராபுரத்திலிருந்து புறப்பட்டுத் தஞ்சாவூர்வழியாகக் கும்பகோணம் வந்து குழந்தையைப் பார்ப்பதுபோலச், சீர்காழியில் சம்பந்தர் பசியால் அழுவதைக்கேட்ட கைலைவாழ் சிவன் சீர்காழியிலுள்ள கோயிலுள் நுழைந்து அங்கிருந்து காளைமீதமர்ந்து குளக்கரைக்கு வரவேண்டியதில்லை. இங்ஙனம்வந்த சிவனும், எங்கும் நிறைந்துள்ளதாகச் சொல்லப்படும் சிவனும் ஒருவர்தானா? அன்றி வேறு வேறு ஆட்களா? என்பதற்குச் சைவ அன்பர்கள் தாம் விடையிறுத்தல் வேண்டும்.

இனிச், சம்பந்தருக்குப் பால்கொடுக்க வந்த சிவன்,

"........மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள், பொழிகின்றபால் அடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன,"

அதாவது அரன் அம்மையை நோக்கி 'உன்னுடைய இரண்டுமுலைகளும் பொழிகின்ற பால் உணவை ஒரு பொற்கிண்ணத்தில் கறந்து அழுகின்றசம்பந்தருக்கு ஊட்டு, எனக் கட்டளை யிட்டார் என்று சொல்லப்படுகிறது. 'அழுகின்ற குழந்தைக்குப் பால் ஊட்டு' என்று சொல்வதைவிட்டுத், துணைமுலைகள் அதாவது இரண்டு முலைகளிலும் இருந்து பொழிகின்ற பாலைக் கறந்து ஊட்டு என்று சிவன் கட்டளை யிட்டதன் கருத்தென்ன வென்பது தெரியவில்லை, மக்களினப்பெண்கள் எல்லாருக்குமே மேலிடம் அதாவது முலைகள் இரண்டு இருப்பதை எவரும் அறிவர். அங்ஙனமன்றி, ஒன்றோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மூன்று நான்கு என்ற கணக்கிலோ பெண்களுக்கு முலைகள் இருப்பதை நாம் பார்த்ததில்லை. இங்கு பேசப்படும் அரனும் அம்மையும் மக்கள் வடிவத்திலேயேவந்ததாகச்சொல்லப்படுகிறது. மக்கள் வடிவத்தில் வந்த அம்மையை நோக்கி, 'உன்னுடைய இரண்டுமுலைகளும் பொழிகின்ற பாலை'என்று சிவன் ஏன் குறிப்பிட்டார் என்பதைக் கேட்டறியச் சேக்கிழார் இங்கில்லை. என்றாலும், சேக்கிழாரைச் சிறுமைப் படுத்தலாமா என்று எம்மீது சீறிவிழும் சிவ அன்பர்களாவது இதற்குவிடைகூறவேண்டாமா என்பதே எமது கேள்வியாகும்.

ஒரு காலத்தில், மலயத்துவச பாண்டியனுக்கு மகளாய் வந்துபிறந்த பார்வதிக்கு மூன்று முலைகள் இருந்தன வென்றும், பின்னர், சோமசுந்தர பாண்டியனாய் வந்துபிறந்த சிவன் அந்த அம்மையைத்திருமணம்செய்துகொண்டபோது ஒரு முலை மறைந்து விட்டதென்றும் ஒரு கதை யுண்டு. இக்கதையிற் பேசப்படும் சிவ அம்மைக்கு மூன்று முலைகள் இருப்பானேன்? பின்னர் ஒன்று மறைவானேன்? என்பதுபற்றிய ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டுவதில்லை. எனவே, சம்பந்தருக்குப் பால்கொடுக்கவந்த சிவ அம்மைக்கு இரண்டுக்கு மேற்பட்டமுலைகள் இருந்தன, அதனால் இரண்டு முலைகள் பொழிகின்ற பாலைமட்டுமே கறந்து ஊட்டும்படி சிவன் கட்டளை யிட்டார் என்று கொள்வதற்கும் புராணத்தில் கருவியில்லை. சேக்கிழார் கூற்றுப்படி, அந்த அம்மைக்கு இரண்டு முலைகள்மட்டுமே இருந்தனவென்பது பெறப்படுகின்றது. பொதுவாகவே பெண்களுக்கு இரண்டு முலைகளே இருப்பன என்பது ஒருவரால் குறிப்பிட்டுக் கூறப்படாமலே அறியப்படும் உண்மையாகும். கூறாமலே அறியப்படும் ஒரு உண்மையை ஒருவர் வலிந்து கூறிப்பிறருக்கு அறிவிப்பானேன்? அல்லது, அறிவிக்கப்பட வேண்டாத ஒன்றுதான், என்றாலும், அந்த இடத்தில் அதனைச் சுட்டிக்காட்டி அறிவிக்கவேண்டியதாயிற்று என்று கொள்வதற்கும் இல்லையே! 'அழுகின்ற சம்பந்தனுக்கு உன்னுடைய முலைப்பாலைக் கறந்தூட்டு' அல்லது, உன்னுடைய முலைகளிலிருந்து பொழிகின்ற பாலைப் பொற்கிண்ணத்தில் ஏந்தி ஊட்டு' என்று கட்டளையிட்டிருக்கலாம். அங்ஙனம் கூறுவதைவிட்டுச், துணைமுலைகள்—இரண்டுமுலைகள் என்று குறிப்பிட்டதன் காரணம் அல்லது பொருள்தான் என்ன? ஒருக்கால், பெண்களுக்கிருக்கும் முலைகள் இரண்டில் ஒன்றில் மட்டுமே பால் வடியும், இன்னொன்றில் பாலே இருக்காது, ஆனால் இங்கு பேசப்படும் சிவ அம்மைக்கு இரண்டுமுலைகளிலிருந்துமே பால் வடியும், ஆதலால், சேக்கிழார் 'துணைமுலைகள்' என்று குறிப்பிட்டதில் குற்றமில்லையே என்று கொள்வதற்கும்

(10ம் பக்கம் பார்க்க)

## தோடுடைய செவியனே

9-ம் பக்கத் தொடர்ச்சி.

இடமில்லையே. பெண்களாய்ப்பிறந்தோர் குழந்தைகளைப்பெற்ருல், அவர்கட்கிருக்கும் இரண்டுமுலைகளிலிருந்துமே பால் வடியக்காண்கின்ரும். ஆனல் சிலருக்கு உடற்கூற்றமைப்பின் காரணமாகப்பால் குறைந்தும் மிகுந்தும் வடிவதுண்டு. இனிக், குழந்தைகளைப்பெற்ற தாய்மார் சிலருக்குப் பால்இல்லாமற் போவதுமுண்டு. அதற்குக்காரணம், பாலாகமாற வேண்டிய குருதியி( இரத்தத்தி)ல் ஏற்படும் நோய்க்கோளாறேயன்றிப் பிறிதொன்றுமல்ல. எனவே, இங்குபேசப்படும் நிகழ்ச்சிக்கும் சேக்கிழாரால் குறிப்பிடப்பட்ட '**துணைமுலைகள்**' என்பதற்கும் யாதாமொரு பொருத்தமுமில்லை என்க. தேவையும் பொருத்தமுமில்லாத இடத்தில்ஒன்றைக்கொண்டுவந்து நுழைத்துத் தேவைப்படுத்திப் பொருத்திக்காட்டும் புலவர்களின் புல்லறிவை எடுத்துக்காட்டவேஇத்துணை அளவுக்கு இதுபற்றிஎழுத நேர்ந்தது.

இனிச், சம்பந்தருக்குப் பால்ஊட்டும் படிகட்டளையிட்டசிவன், சிவையைநோக்கிப், "பாலடிசில் பொன்வள்ளத்தூட்டு" என்றுகூறுகிருர். எதிலும் பற்றற்றவராகப்பேசப்படும் பரமன், பாவையாரை நோக்கிப் பசும் பொற்கிண்ணத்தில் பாலைக்கறந்து பாலகனின் பசியை நீக்கு என்று கூறுவதன்வாயிலாக "எமது பற்றின்மையைப் பாருங்கள்" என்று பொற்கிண்ணத்தை மேற்கோளாகவைத்துக்காட்டுகிருர். பரமனுரின் பற்றற்ற தன்மைக்கு இப்பொற்கிண்ணத்தைமேற்கோளாகஎடுத்துக்காட்டும் இயல்பு எத்துணைப்பொருத்தமாயிருக்கிறது பாருங்கள் அன்பர்களே! பசியால் அழுதபாலகனுக்குப் பால்ஊட்டவந்த பற்றற்ற பரமன், பசும்பொற்கிண்ணத்தைத்தான் தேடியெடுக்கவேண்டுமா? வேறேதாவது ஒரு வனை (பாத்திர)த்தில் பாலைக்கறந்தூட்டியிருக்கக்கூடாதா? பரமனின்உயர் நிலைக்கேற்பப் பசும்பொற்கிண்ணம் ஒன்றுதான் ஏற்புடைத்தா? மண்கிண்ணத்தில்பாலைக்கறந்துமழலையின் பசியை நீக்குவது மதிகுடிக்கு இழுக்காகுமா? பற்றற்ற இயல்பைப் பசும்பொற்கிண்ணத்தின் வாயிலாகத்தான் காட்டவேண்டுமா? பொன்னம்பலமன்றி வேறுமண்ணம்பலத்தில் ஆடாதபொன்னர் மேனியனிடம் பொற்கிண்ணமன்றிவேறுகிண்ணம்எதுவும் இருப்பதற்கில்லை, ஆகவே, அவர் தம்மிடமிருந்த பொற்கிண்ணத்திலேயேபாலைக்கறந்து ஊட்டும்படிஉமைக்குக் கட்டளையிட்டார், இதில் என்ன குற்றம் என்று கேட்பேர்க்கு யாம் கூறக்கூடியவிடையாதுஎது? என்றும், "ஒட்டையும் பொன்னையும் ஒப்ப நோக்குபவன் எங்கள் அப்பன்" என்று தப்பட்டமடிக்கும் தருகளுளரின் தருக்கைஎடுத்துக்காட்டவே இதனையும் இங்கு குறிப்பிட்டோம்.

இனித், துணைமுலைகள் பொழிகின்ற பாலைப் பொற்கிண்ணத்தில்கறந்தஉமை, "எண்ணரிய சிவஞானத்தின்னமுதங் குழைத்து" அதாவது, சிவஞானத்தையும் அம்முலைப்பாலோடு குழைத்துக் குழந்தைக்கு ஊட்டினளாம். "சிவஞானம்" என்பதற்குச் சிவஅருள் அல்லது சிவஅறிவு என்பதே பொருளாகும் சிவஇலக்கணப்படி. இச்சிவஅருள் அல்லது சிவஅறிவைப் பாலோடு சேர்க்குழைப்பது யாங்ஙனம்முடியும்? பாலோடுசேரக் குழைக்கப்படக்கூடிய சருக்கரைபோன்ற ஒரு பருப்பொருளாய்ச் சிவஞானமும், உலகிற்காணப்படும் பருப்பொருள்களில்ஒன்றாய் இருந்தாலன்றி, அதனை யாங்ஙனம் எடுத்துப் பாலோடுகலந்தூட்டமுடியும்? ஞானம் என்பதுகடைகளில் விற்கப்படும் கற்கண்டு சருக்கரைபோன்றஒருபொருளா? "ஞானம்" என்ற வடமொழிச்சொல் "அறிவு" என்ற தமிழ்ச்சொல்லையன்ரே குறிக்கின்றது. அறிவைப் பாலோடுகலந்தூட்டும்பண்பு பார்வதிக்குக்கிடைத்த பான்மையைக்கண்டு பகுத்தறிவலகம் எள்ளி நகையாடாதிருக்கமுடியுமா?

இனி, உமை அல்லது சக்திஎன்ற இருசொற்களும் பரமன் பக்கத்தமர்ந்தாளைக்குறிக்கும் சொற்களாகும், இவ்விருசொற்களுக்கும் பொருள் "அருள்" என்பதேயாகும் என்று சிவஇலக்கணம் செப்புகின்றது. இதற்கு மேற்கோளாக, "அருளதுசத்தியாகும்" என்ற சிவஞான சித்தியாரிலுள்ள பாடலும் எடுத்துக் காட்டப்படுகின்றது. எனவே, அருளே வடிவாகஅமைந்த அந்த அருள் அம்மையார், தமது அருள்வடிவத்துள் அடங்கிய முலையினின்றும் கறந்தெடுத்த அருட்பாலோடு, தனியாகவேறெங்கோ இருந்த அருளை எடுத்துக்கொண்டுவந்து கலந்து கவுணியர்க்கு ஊட்டியதாகவன்ரே வரலாறு கூறுகின்றது. அருளேவடிவாக அமைந்த அம்மையாரின் முலைப்பாலும் அருள்கலந்த பாலாகத்தானே இருத்தல் வேண்டும்! அப்படியிருந்தால்தானே அம்மையாருக்குக்கூறப்படும் அருள் வடிவம் அப்பழுக்கற்றதாகக்கருதப்படும். அங்ஙனமன்றி, அருளேவடிவமாகவுள்ள அம்மையாரிடமும், அருளைப்பெற்று அமணரை ஒழிக்கப்பிறந்த சம்பந்தருக்குக் கொடுக்கக்கூடிய அருள் இல்லாமல் வேறெங்கிருந்தோ எடுத்துக்கொடுக்கப் பட்டதென்பது, அம்மையாருக்கு அருள் வடிவம் இல்லையென்பதோடுநில்லாமல், அருள்வடிவமல்லாத வேறுவடிவம் பூண்டிருந்தாலும், அந்த வடிவத்திலும்கூட அருள் ஒரு சிறிதளவேனும் இருந்திருக்க முடியாதென்பதும் பெறப்படுகின்றது.

இனி, அம்மையாரால் பாலோடு கலந்துகொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சிவஞானம் அல்லது சிவஅருள் எத்தன்மையது? எந்நிறத்தது? எக்குணத்தது? எங்கிருந்தது? அல்லது எங்கிருப்பது? கட்டிப்பொருளா? நீர்த்தன்மை வாய்ந்ததா? கசப்பா? இனிப்பா? என்ற இன்னோரன்ன கேள்விகட்கு, அருளே வடிவமாய்—அருளையே சுரப்பவராகப் பேசப்படும் அண்ணலுக்கு அடிமைபூண்டொழுகும் அன்பர்குழாங்கள் அமைதியான விடைதரமறுப்பின், அத்தகையினர்க்காக நாம் இரங்குவதைவிட வேறென்ன செய்யமுடியும்?

இனி, இந்நிகழ்ச்சியை ஒட்டிவரும் 'தோடுடையசெவியன் என்பதுபற்றியும் ஒருசிறிது ஆராய்வாம், பரமன்கொடுத்த பாலையுண்ட எச்சில்வாயோடு குளக்கரையில்நின்ற குழந்தையைநோக்கி, "நீயார் தந்தபாலை உண்டாய்" என்று தந்தையார்கேட்டகேள்விக்குவிடையாகவானத்தில் காணப்பட்டவிடையேறியைச் சுட்டிக்காட்டித், "தோடுடையசெவியனுகிய இவன்தந்தபாலையே உண்டேன்" என்று கூறிற்ரும், இல்லை! இல்லை!! பண்ணேடியைந்த பதிகத்தால் பாடிக்காட்டிற்ரும் அந்தப் பாலகன். பாலுக்காகப் பதறிஅழும் நிலையிலுள்ள ஒருபச்சிளங் குழந்தை பள்ளிக்கூடம்சென்று பாடங்கேட்காமுன்னர் பண்ணேடியைந்தபாடலைப்பாடிற்றென்பது குறித்த ஆராய்ச்சியில் நாம் இறங்கினல், நாமும் சேக்கிழார்பட்டியில் சேர்க்கப்பட்டுச், சிறிதளவு அறிவுடையோராலும் சிறுமைப்படுத்தப்படுவோம். காரணம்: கல்விகற்று—இலக்கணவரம்பைக்கண்டு-இலக்கியத் தெளிவுபெற்று-இசைநுணுக்கம் அறிந்தபின்னரே ஒருவனல் பாட்டுக்கட்டவும் பாடவும் முடியும் என்பதைநாம்அறிந்ததால் மட்டுமல்ல, இதனை மறுக்கும் அத்துணைச்சிறுமதியுடையோர் எவரும் இருக்கமாட்டார்என்பதனுலும் என்க.

எனவே, பாட்டுப்பாடியவர் வேறுயாராய் இருக்கலாம் என்பதுபற்றிய ஆராய்ச்சியிலும் நாம் இறங்கவில்லை. மற்றுப், பாட்டுக்கற்பிக்கும் கருத்தையே நாம் இங்கு ஆராய்கின்ரும். '**தோடுடைய செவியன்' என்பதற்குக் காதில் தோடு அணிந்துள்ளவன் என்பது** பொருள். எனவே, '**தோட்டைத்தமது செவியில்** அணிந்துள்ள **அந்தச்சிவன்** எனக்கு இந்**தப்பாலைத் தந்தார்**' என்று சம்பந்தர் **தந்தைக்குக் கூறுகிருர்**. சிவன் தோடணிந்திருந்தாரா? சிவன் ஆணுயிற்றே! ஆண் தோடணிவதுண்டா? பெண்களன்ரே தோடணிவர்! ஆண்கள் கடுக்கனன்ரே அணிவர்! ஆணின் காதணி கடுக்கன்! பெண்ணின் காதணி தோடு! இங்கே! சிவன் தோடணிந்திருந்தார் என்றுகூறுவது எப்படிப்பொருந்தும்? என்று என்னைக்கேட்காதீர்கள். சம்பந்தரைக்கேளுங்கள்; சேக்கிழாரைக்கேளுங்கள்; அவர்கள் இருவரும் இல்லையே, எப்படிஅவர்களைக்

(5-ம் பக்கம் பார்க்க)

## பிரசங்க பூஷணம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி.

துதான் தமிழ் தேய்கிறது. நான் அத்தகையவனே! நான் சைவன், என்றாலும், வைணவ, பௌத்த, கிருத்தவ இஸ்லாமிய அன்பர்களை, நான் அலட்சியம் செய்தல் கூடாது. இந்தநன்னெறியைமட்டும் நாட்டிலே நிலைநாட்டிவிட்டால், பூலோக கைலாயம் இதுவேயாகும்'' என்று கூறினார்.

அன்பரே! என்ற ஒரே பதத்தினால், இந்த நோக்கம் நிறைவேறுமே, ஏன், அதைவிட்டு, அடுக்கிக்கொண்டிருக்கிறீர், என்றுகேட்க வேண்டுமென்று சீடனுக்குத்தோன்றிற்று. ஆனால் அவன் பிரசங்க பூஷணமா, மறுத்துரைக்க!

''ஆலமரத்தடியார் கோயிலில், ஆன்றோரும் சான்றோரும் குழுமியுள்ள இக்கூட்டத்தின்கண், அடியேனைப்பேசுமாறு கேட்டது, என்பாக்கியமேஅன்றோ. இத்தகைய சபையிலே, நின்றுபேசக்கூடிய அறிவாற்றல் எனக்கு உண்டோ எனில், இல்லைஎன்பேன். ஏதோ, என்னையும்ஒரு பொருட்டாகமதித்துப்பேசுமாறு அழைத்தனர்.'' என்றுபிரசங்கபூஷணம்கூறிட, ஏடுஎழுதி, வேகமாக எழுதிமுடித்தான். மேற்கொண்டு, விஷயத்தைவிளக்கப்போகுமுன், அதுவரை எழுதிய பிரசங்கத்தைப்படிக்கச்சொல்லிக் கேட்டுஇன்புற்றார் புலவர்.

''இதேபோலத்தான், திரு. வி. கலியாணசுந்தரனார் பேசுகிறார். ஆனால் ஒரே ஒருவித்யாசம். இத்தகைய சபையிலே நின்றுபேசக்கூடிய அறிவாற்றல்உண்டோ எனில், இல்லைஎன்பேன்என்று கூறினீர், திரு. வி. க. இல்லை, என்று ஒருமுறை மட்டும்கூறார், இல்லை, இல்லை, இல்லை, என்று மும்முறை கூறுவார்'' என்று சீடன்கூறினான். சிரித்தார்புலவர். எழுது என்றார்.

''சிலர், எதனைக்கூறும்போதும், மும்முறைகூறுவர். உண்டு, உண்டு, உண்டு என்பர். என்னே, என்னே, என்னே என்பர். இந்த மும்முறைப் பிரயோகம் வீணை நேரத்தையும் நினைப்பையும் விரயமாக்குவது அன்றோ, அதுநன்றோ' ஒருமுறை உரைத்திடில், சரியன்றோ, என்னிடம் அத்தகைய வழக்கம் கிடையாது, எப்போதும் கிடையாது, நிச்சயமாய்க் கிடையாது.'' என்றார். சீடனுக்கு இதை எழுதும்போது, கஷ்டமாகத்தான் இருந்தது. மும்முறை கூறலை முறையன்று என்று மொழிந்திடுபுலவர், அதனையே மும்முறை கூறுகிறாரே, முறையாமோ என்று எண்ணி ஏங்கினான். ஆனால், எங்ஙனம், மனதிலுற்றதைக் கூறுவான்; தவறு இழைத்தவர் வெறும் தமிழ்ப்புலவரல்லவே! பிரசங்கபூஷணமாயிற்றே!

''ஒவ்வோர் சொற்பொழிவாளரும் அவையடக்கம்என்ற அவசியமற்ற பகுதியைநீட்டிச்சபையை வாட்டுவர். அடியேனிடம்அந்த நோய்அணுகுவதில்லை. வீணனவார்த்தைகள் எனக்கு வேம்பு. அவை அடக்கம் ஒரு அவசியமற்ற, பயனற்ற, சுவையற்ற, உயிரற்ற, கருத்தற்ற, முறையற்ற, சுவைப்பயனற்ற, பயனுள்ளசுவையற்ற, கருத்துமுறையற்ற, முறையான கருத்தற்ற, உயிர்ச்சுவை அற்ற, கருத்துயிரற்ற, உயிர்க்கருத்தற்ற, காரியம், என்பதை எடுத்துக்கூற நான் அஞ்சப்போவதில்லை. அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்செழுத்தை ஓதினார்யார்க்கும் என்ற ஆன்றோர்மொழி ஈண்டு சிந்திக்கற்பாலது. ஆன்றோர் மொழியைச் சிந்திக்க வேண்டுவது ஏன்எனில், ஆன்றோர்சான்றோராகலின்.'' என்று, அவையடக்கத்தின் அவசியமற்ற தன்மைபற்றி, அழகுறக்கூறினார் பிரசங்கபூஷணம், சீடர் எழுதினார்.

''தம்பி!'' என்றுகூறினார்புலவர், சீடர் எழுதப்போந்தார். ''எழுதாதே! இது எழுதுவதற்கல்ல, உனக்குக்கூறுகிறேன். ஒருசொற்பொழிவின் இலட்சண விளக்கத்தைக்கேள். எந்தவிஷயத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்விஷயத்தைப் பற்றியே மறந்து, வீணான அவைஅடக்கம், சபைவணக்கம், கூறிக்காலத்தைக்கொலைசெய்வது இருக்கிறதே, அது கொடிது, மகா கொடிது. அவைஅடக்கம் என்ற பகுதியைஅதிகமாக வளர்த்தக்கூடாது. என் சொற்பொழிவிலே நீஎப்போதும், கூர்ந்துகவனித்தால் ஒருமுக்கியமான விஷயத்தைக்காணலாம். அதுதான், என் அனுபவத்தின், ஆராய்ச்சியின்விளைவு. என்னவெனில், நான், அனாவசியமாக அவையடக்கம் கூறிக்காலத்தை வீணாக்கமாட்டேன்'' என்றுகூறினார். நாவை அடக்கி வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திலே இருந்தசீடன், அவை அடக்கத்தை நீட்டிச் செல்வது கூடாதுஎன்ற விஷயத்தையே, பிரசங்கபூஷணம்,நீட்டிக்கொண்டு,நேரத்தைவீணாக்கிச், சொற்பொழிவுக் கேற்ற விஷயத்துக்கே வாரமலிருக்கிறாரே என்றுதெரிந்தது, கூறமுடியுமா! கூறுவது, குருசீடமுறைக்கே பங்கமன்றோ!

இடையே பேசிவிட்டதால், தொடர்பு மறந்துபோகவே மீண்டும் ஒருமுறைஎழுதினவரையிலே படிக்கச்சொல்லிக்கேட்டார் பிரசங்கபூஷணம்.

''அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகலான். இந்த வாசகத்தை, மணிவாசகம் என்பேன், அணிவாசகம் என்பேன், பணிவாசகமுமாகும். அறநெறியும், அன்புநெறியும் கொண்டவர் அந்தணர், அழகிய தன்மையை உடையவர், அவர்கள் எல்லா உயிரிடத்தும் அன்பு காட்டும் தகைமையினர். அவரே அந்தணர்.

''ஐயகோ! அந்தணர் என்போர், நம்மனோரைக்கெடுப்பர் என்றோர் சாரார் கூசாது பொய்கூறுகின்றனர் இஞ்ஞான்று. அவர்தம் அறிவு செல்லும்வழி அறவழி ஆகாது. அந்தணர், செய்தகுற்றம் என்னே? அவர் நம்மனோருக்கு இழைத்த தீங்குதான் என்னே! என்கண்களுக்குப் புலனாவதில்லை. என்கண்கள்என்றால், எக்கண்கள்? புறத்துலகைக்கண்டுகண்டுவெறியாட்டமிடும்கண்களோஎன்பீரேல்,இல்லை என்பேன், முக்காலும் இல்லைஎன்பேன். இக்காலத்ததுமட்டுமல்ல, அக்காலத்து, அரசர்களையும் அரச அவைகளையும், அறிஞரையும் அவர் தம் அறநெறியினையும், இகத்தையும் பரத்தையும், சேரநாட்டையும் சோழமண்டலத்தையும், பாண்டியன் பதியையும் குறுநிலமன்னர் பலர் வாழ்ந்த பதிகளையும், அடியார்களையும், அடியார்க்கடியார்களையும் கண்டுகளிகொண்டகண்கள்! என்கண்கள், இவ்வளவையும், இன்னும் பலவற்றையும் கண்டவை. ஏடுகளிலே கண்டேன்! இறும்பூதெய்தினேன், அவ்வளவு கண்ட என் கண்களை, நான்நம்பாதிருக்க முடியுமா? அவைகளைக்கொண்டே நான் காண்கிறேன், அந்தணரை. அவர்தம்மீது ஆன்றோர்வழி செல்லாத மாபாவிகள் சிலபலர், அடாததுகூறுகின்றனர், நெஞ்சம் நோகிறது, கொஞ்சமும் தாங்கமுடியவில்லை இக்கொடுமையினை. அந்தணர் குற்றம்ஏதும்செய்திலர், செய்யார், செய்யும்வழியும் அறியார். அவர் அந்தணராய்ப் பிறந்ததற்கே அஃதேயன்றோ காரணம்! இதோ, என்நண்பர், வேதசாஸ்திரவிற்பன்னர் அருணாசலஐயர் அவர்கள் இருக்கிறார். இவர்முகத்திலே அந்தவெள்ளைக் கலைஉடுத்திய மாது தாண்டவமாடுவது காணலாம். நெஞ்சிலே நாதன்தான், கொஞ்சமும் வஞ்சம்அறியாதார். ஒன்று கூறுவேன்; நான், இந்தநிலை பெற்றதற்குக்காரணமே நமதுஐயர் அவர்களின் நற்கருணையும் உதவியுமேஎன்பதை நான் குன்றேறிக்கூவுவேன், அந்தணர் குலத்தைப்பழிக்கும் இழிதகைமையாளர்செவிகெடக்கூவுவேன். என்னுடைய புலமையைப்போற்றினீர்கள். பதிகத்தைப்பாராட்டினீர்கள். பட்டத்தைச்சூட்டினீர்கள். எட்டினைப்படித்தீர்கள். அந்தஏடு ஏது? நான் தீட்டியது! தீட்டியது எப்படி? திருஅருளால் தீட்டினேன். திருஅருள் கிட்டினது எங்ஙனம்? இதோ என் நண்பர், என்னாசிரியன், அருணாசலஐயர் கூட்டிவைத்தார் திருஅருளை. அவர் என்னைத்தூண்டி, ஊக்குவித்து, ஏடுஎழுதச்செய்தார், செய்தேன். அன்புமழை பெய்தீர்கள். இதற்குக்காரணம் இவரன்றோ! இவர் ஓர் அந்தணர், நான் அந்தணர் குலமல்ல! எனினும், எனக்குக் கொடுத்தது அந்தணரே, என்புலமையை நீங்கள் தெரிந்துகொள்ளச்செய்தவரும் அவரே. இப்படிப்பட்ட அந்தணர்குலத்தைவீணே சிலபலர் நிந்திக்கிறார்கள், தம்து அறிவீ

(3ம் பக்கம் பார்க்க)

# உறுதி கூறினர்!

—

உலக சரித்திரத்தில், தான் சொன்ன சீர்திருத்தம் தன் காலத்திலேயே செயலில் நடப்பதைப்பார்த்து மகிழும் பெருமை எவருக்கும் இருந்ததாக நாம் படித்ததில்லை. அப்படி இருந்தும் தாம்நேற்றுச் சொன்னதை இன்று மக்கள் பின்பற்றி நடப்பதை கண்ணாரக் கண்டு அந்தஉற்சாகத்திலேயே திகழ்ந்து இன்னும் திடமுடன் வேலை செய்யும் தோழர் ஈ. வே. ரா. நம்மிடம் இருக்கும்போது சூழ்ச்சியே உருவான எத்தனை ஆச்சாரிகள் தோன்றினாலும், எவ்வளவு இன்னல்கள் விளைத்தாலும், அவற்றைக்கண்டு அஞ்சாது எதிர்த்து, நொருக்கித், தூளாக்கி நமது கடமையைச் செய்துகொண்டுதான் மேலேறிப்போகப்போகிறோம். எண்ணற்ற சோதனை காலங்களிலெல்லாம் நம்மை ஆதரித்த மக்கள் நம்முடன் இருக்கிறவரை, நாம் எதைக்கண்டும் ஏங்கி நிற்கப் போவதில்லை. நமது சமூக நாகரிகத்தைக் குழிதோண்டிப் புதைக்கத் தோன்றிய பிராமணியத்திற்குச் சாவுமணி அடித்தாகி விட்டது. சீர்திருத்தப் பிரயாணத்தில் எத்தகைய தியாகத்துக்கும் ஈடுசெய்து கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராய் இருக்கிறோம் என்பதையும், தலைவர் ஆக்ஞைப்படி எப்பேற்பட்ட அக்கினிப் பரீட்சைக்கும் நாம் ஆளாகத் தயாராயிருக்கிறோம் என்பதையும், நமது தலைவர் ஈ. வே. ரா. அவர்களுக்கு உங்கள் பெயரால் உறுதி கூறிவிடுகிறேன். இனி நமது ஆவியை அன்னாரது கையில் ஒப்படைப்போம். தோழர்களே, தோள் தட்டித், புஜங்குலுக்கித், தொடைதட்டி வாழ்வோமாக."

இதுபோல, உறுதி கூறியவர் யார்? இன்று, பெரியாரை ஒழித்தாகவேண்டுமென்று (காகிதக்) கங்கணம்கட்டிக் கொண்டிருக்கிறாரே நகரதூதன் ஆசிரியர், அதே தோழர் திருமலைசாமி அவர்கள்தான் மதுரையிலே 13—3—38ல்கூடிய சு. ம. மாநாட்டிலே அவர் ஆற்றிய தலைமையுரையில் ஒருபகுதியே, மேலேதரப்பட்டுள்ள உறுதிமொழி!

இன்று அவருடைய விழிவேறுவழியிலேதிரும்பி, மொழி வேறாகிவிட்டது!! காலக்கொடுமையைக் காணுங்கள்!

—

## கோவையில்
# சீர்திருத்தத் திருமணம்

—

தோழர் எ. கிருஷ்ணசாமிசெட்டியார் பி. ஏ., அவர்களின் குமாரத்தி தோழர் கே. இந்திராணிக்கும், தோழர் என். முனியப்ப செட்டியார் குமாரன் துரைசாமிக்கும், 19—1—45-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 8-மணிக்கு அவனாசிரோடு 'பிரசிடெண்டு' பங்களாவில் சிறப்பாகச்சீர்திருத்தத்திருமணம்நடந்தேறியது. டி திருமணத்திற்கு உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பலபிரமுகர்களும், பெண்மணிகளும் வந்திருந்தனர். மூன்றே நிமிஷங்களுக்குள் மணமகன் மணமகளுக்குத்தாலிகட்டி மாலைகள் மாற்றிக்கொள்ளப்பட்டன. பிறகு பெரியார்அவர்கள் சுமார்¾மணிநேரத்துக்குமேலாகச் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம்பற்றியும், இம்மாதிரி திருமணங்கள்இன்றுநாட்டில் சர்வ சாதாரணமாக நடந்து வருவதைப்பற்றியும் பேசிமணமக்களை ஆசீர்வதித்தார். மாலை 6-மணிக்கு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் கச்சேரி நடந்தது.

இந்தத்திருமணத்தின் ஞாபகக்குறிப்பாகத் "திராவிடநாடு" பத்திரிகைக்கு ரூ. 5—0—0 வழங்கப்பட்டது.

## அவருடைய நம்பிக்கை!


"எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், யாருடைய பொல்லாப்பையும் இலட்சியம் செய்யாமல் திராவிட நாடு தனியாகப்பிரிக்கப்படும்வரை போராடுவோமாக. இதற்கு, நம்மிடையே ஒப்பற்ற தலைவர் பெரியார் இருக்கையில் நாம் ஏன் அஞ்சவேண்டும்? அவரது தலைமையில் நாம் வெற்றியுறுவது நிச்சயம் இதுதான் என்நம்பிக்கை. அது உங்கள் யாவருடையதுமாக இருக்கட்டும்" இந்த நம்பிக்கையை நமக்குஊட்டியவர், சேலம் தோழர் C. G. நெட்டோ! ஆமாம், இன்று பெரியாரை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று பேசிவரும் அதே அன்பர்தான்! காஞ்சீபுரத்தில் 1940, ஜூன் மாதம் கூடிய பிரிவினை மாநாட்டுத் தலைமை உரையில் ஒருபகுதியே, மேலே தீட்டியிருக்கிறோம். அவருடையகவனத்துக்காக!

தந்தி:—"புறமார்க்" திருச்சி.




கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

# கிளி மார்க் பட்டணம் பொடி.




தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும்,
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

**எ. எஸ். ராஜன் கம்பெனி,**
பழயவண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319, Hodgsonpet Conjeeveram